Regd. No. M. 4900. 16-பக்கங்கள். தனிப்பிரதி விலை 0-2-0.

நமது இயக்க அச்சு வேலைகள் அனைத்துக்கும் சிறந்த இடம் ★ தமிழன் பிரஸ், ஈரோடு.

# குடி அரசு

நமது இயக்கப் புத்தகங்கள் அனைத்தும் கிடைக்குமிடம் ★ நாதன் கம்பெனி ஈரோடு.

வருட சந்தா உள்நாடு ரூ. 7-0-0. வெளிநாடு ரூ. 9-0-0.

மாலை 21 ஈரோடு 6-3-1948 சனிக்கிழமை மலர் 26.

# தவளையின் சொர்க்கம்?

[நாரா—நாச்சியப்பன்]

★

தென்றல் சிலிர்சிலிர்க்கத் தேன்மாரி பெய்திருக்கக்
கன்னல்நேர் மங்கை கருப்புத் தவளையாள்,
மன்னன் தவளை மடியிருக்கும் வேளையிலே,
"சொன்னநாள் வந்ததையா சொர்க்கம்போம் வேளையிது"
என்றிவை சொன்னான் எதிர்வந் தமைச்சன்.
"புரோகிதன் வந்தேன்நீர் போவதற்குத் தக்க
சிரோன்மணிகள் பாதை திறந்துள்ள திப்போதே
செல்லும் சடங்கெல்லாம் செய்யவோ" என்றந்தப்
புல்லன்! புரோகிதன்! பொய்நாக்குப் பாம்பண்ணன்!
சொல்லியதும் வெற்றிலை சூடமொடு பாக்கெல்லாம்
கொண்டுவந்து பாம்பண்ணன் வாய்முன் படைத்துச்
"சடங்கெல்லாம் செய்து சடுதியில் நான்போகத்
திடமான மந்திரங்கள் செப்புகவே" என்றன்னான்
தாள்வணங்கிச் சொன்னான் தவளை யரசன். "நீர்
மால்மருகா! மால்மருகா! வாமுருகா என்றெல்லாம்
சொல்லிஎன்றன் பின்னே சுறுசுறுப்பாய் ஓடிவந்து
கல்லென்றும் மேடென்றும் காடென்றும் பாராமல்
வந்தால் விரைவில் வரவேற்கும் சொர்க்கமுமை"
என்றந்தப் பாம்பார் இசைக்கச் சரியென்று
மன்னன் தவளை யரசி தவளையிடம்,
"இன்ப புரிக்குநான் ஏகுகின்றேன் மங்காய்நீ
இன்னும் சிலநாளில் இன்பபுரி வந்திடுக!
பாம்புப் புரோகிதர்தம் பாதம் பணிந்திடுக!
தேம்பா திருந்திடுக!" என்றவளைத் தேற்றித்
தவளையும் பாம்பாரின் தாள்தொடர்ந்தே ஓடச்
சிவசிவ என்றுரைத்துச் சீறிப்போம் பாம்பதுவும்,
வட்டமாய் ஓடி வளையத் தவளையும்,
திட்டமுடன் வால்தொடர்ந்து செல்கின்ற வேளையிலே
வாயின் அருகினிலே வந்தவுடன் சீறிப்போய்ப்
பாய்ந்தத் தவளையைப் பாம்பும் விழுங்கியதால்!
"மண்டும் அறிவீனத்தாலிந்த மக்களெல்லாம்
கண்டபடி ஏமாந்து காசைப் புரோகிதர்க்குக்
கொண்டு கொடுக்கும் கொடுமைபோற் போனதே,
மண்டுத் தவளையும் மாய்ந்து!"

பெண்கள் பகுதி:

# சுதந்தரம் வேண்டுமானால்...

(தோழியர் இந்திரா)

சுதந்தரம் வேண்டுமானால், சூழ்ச்சிக் கும்பல் ஒழியவேண்டும். ஆட்சி பீடம் மக்கள் சொத்தாக வேண்டும். வீழ்ச்சி அடைந்த—விசை ஒடிந்த அடிமைகள் எழுச்சி பெறவேண்டும். சுதந்தரம் வேண்டுமானால் என்ற கேள்வியே, அடிமைகள் சூழ் நிலையில் எழுகின்ற ஒன்று. அடிமைத் தனம் அழுத்தக் கழுத்து வலியெடுக்கும் நேரத்தில் சுதந்தரம் இருந்தால் என்ற கற்பனை தோன்றும். பின் சுதந்தரம் வேண்டுமானால் என்ற திட்டம் பக்குவம் அடையும். பின் அடிமை வாழ்வு நிகழ்காலத்திலிருந்து இறந்தகாலமாகிவிடும்.

எங்களுக்குச் சுதந்தரம் வேண்டும். ஆம்—பெண்களுக்குச் சுதந்தரம் வேண்டும். ஆண்களுக்கு அடங்கி நடப்பதே லட்சியமாகக் கொண்டிருக்கிறார்களே, அவர்களுக்குச் சுதந்தரம் வேண்டும். அடுப்பங்கரையிலேயே, ஆயுளைக் கழிக்கிறார்களே அவர்களுக்குச் சுதந்தரம் வேண்டும். வாழ்வதாக எண்ணிச் செத்துக்கொண்டிருக்கிறார்களே சமுதாயத்தின் ஒரு பகுதியினர், அவர்களுக்குச் சுதந்தரம் வேண்டும். விடுதலை பெற்றதாகக் கூறப்படும் இந்த நாளிலும், திராவிட இனம் போல அடிமைகளாக வாழுகிற பெண்ணினத்துக்குச் சுதந்தரம் வேண்டும். கல் ஆனாலும் கணவன் என்றிருந்தும் அலட்சியப் படுத்தப்படுகிறார்களே, அவர்களுக்கு விடுதலை வேண்டும். புல் ஆனாலும் புருஷன் என்றெண்ணி கொஞ்சவேண்டிய கணவனால் வஞ்சிக்கப்படும் பெண்ணினம் தழைக்க, அவர்கள் விடுதலை பெற வேண்டும்.

ஆணுக்கும் பெண்ணுக்கும் நடக்கும் திருமணத்தில், பெண் மட்டும் அந்த மணச் சின்னத்தை ஏன் தாங்கவேண்டும்? மணமுத்திரையை அவள் மட்டும் ஏன் குத்திக்கொள்ளவேண்டும்? ஆண் தாங்கினால் என்ன? அவர்களுக்கு வெட்கமாயிருந்தால் இருவருக்கும் வேண்டாம் என்று விடட்டுமே! கணவன் உண்ட பின்னரே மனைவி உண்ண வேண்டும் என்ற நியதி வழக்கத்திலிருந்து வருகிறது! பசியெடுத்தாலும் புசிக்காது காத்திருக்கவேண்டுமாம், தன் அன்பைக்காட்டுவதற்காக! கணவன் உண்ட எச்சில் இலையில் தான் உண்ணவேண்டுமாம்! இதுவும் தன் அன்பைக் காட்டவாம்! இவையெல்லாம் பெண்கள் அடிமைகள் என்று உறுதிப்படுத்துகிற அடிமைச் சின்னங்கள். இவற்றை யெல்லாம் தகர்த்தெறிந்ததா அனைந்திந்திய மாதர் மகாநாடு? அல்லது மாற்றித்தான் அமைத்ததா? இதுபற்றி எண்ணியதாகக் கூடத்தெரிய வில்லையே! பெண்களை அடிமையாக்கும் ‘இந்து லா’வை மாற்றியமைக்கச் சிந்திக்கக்கூட இல்லை அவர்கள்! அவர்களிடம் இதை எதிர்பார்ப்பதுகூடத் தவறுதான்! நெருப்பில் நீரை எதிர்பார்க்கலாமா? வருணாஸ்ரம தரும முறையில், தேர்ந்த திராவிடம் நல்வாழ்வை எதிர்பார்க்கலாமா?

“உலக வளர்ச்சியை எண்ணி நான்முகனானவர் தம் முகம், தோள், தொடை, கால் என்ற நான்கு உறுப்புகளிலிருந்தும் முறையே முகத்திலிருந்து பிராமணனையும், தோளிலிருந்து க்ஷத்திரியனையும், தொடையிலிருந்து வைசியனையும், காலிலிருந்து சூத்திரனையும் படைத்தார்?”

இதை ஒப்புக்கொள்ளுகிறார்களா நமது மந்திரிகள்? பெண்களை யார் எப்படிப் படைத்தார்கள்?

பெண்கள் பசியெடுத்துப்போன மிருகங்கள் அல்ல. ஆண்கள் மத்தியில் பெண்கள் நடமாடுவதால், கெட்டுப்போக வகையேற்படுகிறது என்று முட்டாள்தனமாக எண்ணி ஒரு சில பல கல்லூரிகளில் பெண்கள் சேர்த்துக்கொள்ளப்படுவதில்லை. பெண்கள் முன்னேற்றத்தில் அக்கரை கொண்டிருந்தால அரசாங்கம் இந்த நிலையை ஏன் நீடிக்க விடவேண்டும். உடனடியாக மாற்ற வேண்டாமா? அந்தக் கல்லூரி நிர்வாகிகளுக்கே தெரியும். பெண்கள் தங்கள் வாழ்வுக்கு எவ்வளவு தேவைப்படுகிறார்கள் என்று. பாதிரிகளாக இருந்தாலுங் கூடத்தான். வெள்ளை உடையும், சிகப்பு நாடாவும் அணிந்தால் உள்ளத்தில் எழும் ஆசை அடங்கிவிடுமா? “ஆசையைத் தணிக்க ஒரே வழி அதற்கிசைவது தான்” என்ற நல்ல அறிவுரையை அறியாதவர்களா அவர்கள்? அறியாவிட்டாலும், அனுபவத்தில் உணர்ந்திருப்பார்களே! “ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வது” எங்கே? இந்தச் சூழ்நிலை இன்னும் இருக்குமானால்.

பெண்கள் விடுதலை என்றவுடன் கொதிக்கும் மனத்தவர் கூறிய ‘அவர்களுக்குத் திறமையில்லை’ என்ற வாதம் மதிப்பிழந்து விட்டது. ஆணும் பெண்ணும் ஒன்றுதான் அமைப்பு முறை தவிர, என்றறிந்து கொண்டனர். பின்னும் பெண்களை மெல்லியவள், என்று கூறுவதை, எழுதுவதைத் தடைப்படுத்த வேண்டும். எந்த எழுத்தாளனும் பெண்களை வர்ணிக்கிறானே தவிர, ஆண்களை வர்ணிப்பதில்லை தான் ஆண் என்ற காரணத்தால். இதையும் ஒழிக்க வேண்டும்.

மாதர் மாநாட்டில் நிறைவேறிய, உருப்படியான ஒரு ‘கர்ப்பத் தடை’ தீர்மானம் வரவேற்கத்தக்கது. புலனடக்கம் என்பது எல்லாம் வெளி வேஷம். தங்களை மறைத்துக்கொள்ள சுயநல வாதிகள் செய்த திரை, செயல் முறைக்குச் சிறிதும் ஒவ்வாதது. புயலால் கடல் குமுறத்தான் செய்யும். இன்பத்தை விழைவது தவறுமல்ல, குற்றமுமல்ல. இயற்கை தான். சிறு வயதிலிருந்தே தனித் தனியே வளர்ந்த ஆணும் பெண்ணும், நெருங்காமல் தீண்டாமல் வாழ்ந்த அவர்கள், தனியறையிலே சந்தித்து அறியாத அவர்கள், தாயைத்தவிர வேறு பெண்ணை தொட்டறியாத அவன்—வேறு ஆணைத் தொட்டோ, பார்த்தோ அறியாத அவள்—தனி அறையில் சந்தித்ததும், தொட்டதும், துவளுவர். பத்தாவது மாதத்தில், வீட்டில் ஒன்று தவழும். பின் ஒன்று. அதன்பின் ஒன்று......

# மகாத்மாமீது நம்பிக்கையா? கருடாள்வார் மீது காதலா?

(கைவல்யம்)

★

மகாத்மா காந்தி அவர்களின் அஸ்திகள் உயர்ந்த மரியாதை, பக்தியுடன் சமுத்திரம், நதி, சங்கமம் முதலிய இடங்களில் கரைக்கப்பட்டுப் பிரேத சமஸ்காரங்கள் முடிவடைந்தன. அஸ்தி கரைப்பதில் தெய்வத்தன்மை ஒன்றுமில்லை. மண்ணிலிருந்து உண்டான தேகம் மண்ணோடு மண்ணாகக் கரைந்து போகவேண்டுமென்பதற்கே கரைப்பது, என்று இராஜகோபாலாச்சாரியார் எழுதினதைப் பத்திரிகையில் படித்திருப்பீர்கள். கால் கை பட்டுச் சிந்திக், கண்டவிடம் கிடக்காமல் இருப்பதற்கே கரைக்கும் ஏற்பாட்டைச் செய்தார்கள். கரைப்பதால் அஸ்தியும் அதைச் சேர்ந்த ஆத்மாவும் சொர்க்கத்திற்குப் போய்விடுமென்பதினாலல்ல. இதை ஏன் எழுதுகிறேன் என்றால், மகாத்மா காந்தியின் அஸ்தியையே கரைத்தார்கள். அவர்களுக்குத் தெரியாததா நமக்குத் தெரிந்து விட்டது? ஆனதால் உங்களப்பன் அம்மா அஸ்தியையும் புண்ணிய நதிகளில்தான் கரைக்கவேண்டும் என்பார்கள் புரோகிதர்கள். முன்னமேயிருக்கிற சாஸ்திர ஆதாரம் பத்தாமல், மகாத்மா அஸ்தி கரைப்பைப் புரோகிதர்கள் தங்களுக்குச் சாதகமாகக்கொண்டு பணக்காரனைச் சுற்றிக்கொள்ளுவார்கள் என்பதைக் காட்டவே. மகாத்மா சங்கதி தனியானது. சனங்கள் அவருக்கு மரியாதையும் பக்தியும் எவ்வளவு காட்டினாலும் பொருந்தும். நம் அஸ்திகள் அதிலும் பணக்காரர்கள் அஸ்திகள் கரைப்பதற்குப் பார்ப்பார்களுக்குப் பணமும் விருந்தும் வேண்டும். அதிலும் புரோகிதர்கள் மகாத்மாவைச் சொல்லிக், கிரிகைகளைப் பெருக்கி நீட்டி அவர்கள் சொல்லுகிற இடத்திலெல்லாம் அரிசியும் பணமும் வைக்கவேண்டும். அந்த இடத்தில் நம்மவர்கள் ஆலோசனையைச் செலுத்தவே இராஜகோபாலாச்சாரி எழுதினதையும் எடுத்துக்காட்டினேன். பெரிய கிரியைச் சடங்குகளுடன் பார்ப்பார் கூட்டத்தோடு புரோகிதர் சொற்படி அஸ்தி கரைப்பதற்கும், ஒரு ஆள்காரன் கரைத்துவிட்டு வருவதற்கும் பலனும் கருத்துமொன்றுதான். உண்மை மனதில் இடம்பெற, அறிவை விலாசப்படுத்திக்கொள்ள வேண்டும்.

மகாத்மாவின் தேகத்தைச் சுட்டானேயல்லாமல் அவருடைய மேலான எண்ணங்களையும், ஆத்மாவையும் சுடவில்லை. மகாத்மாவின் ஆத்மா சாந்தியிலேயே பழகினது, எங்கிருந்தாலும் சாந்தியாகவே யிருக்கும், அவுரைப் பற்றின வரையிலும் அவர் ஆத்மா சாந்திதான். நம்மைப்பற்றின அவருக்குள்ள எண்ணம், முழுப் பலனில்லாமை, நாம் அழிந்து போகும் நம் பழக்கத்தின் கொடுமை முதலியவைகளால் அவர் ஆத்மாவிற்குச் சாந்தி ஏற்படாமலிருக்கலாம். அதற்காகப் பிரார்த்தனை, பஜனை, ஆராதனை, அபிஷேகம், லெட்ச தீபம், லெட்சார்ச்சனை, குட விளக்கு, கோவில் அலங்காரம் முதலியவைகள் செய்து அவர் ஆத்மா சாந்தியடையட்டும் என்று வாழ்த்தி விடுவது சுலுவான வேலை. அதில் பிரயோஜனமுமில்லை. அவருடைய ஆத்மாவை நம்மிடம் ஒப்புவித்தார். அவருடைய ஆத்மாவிற்கும் நமக்கும்தான் விவகாரமும், சம்மந்தமும். அப்படியிருக்க அவர் ஆத்மாவைக் கடவுளிடம் நாம் ஒப்புவித்துப்பஜனை செய்துவிடுவது நியாயமில்லை. ஆத்மார்த்தவழி, ஆத்மார்த்த மார்க்கம், ஆத்மார்த்த சேவை என்கிற அர்த்தமாகாததையும், ஏமாற்றுப் பேச்சுகளையும் விட்டு, தானாக விரும்பி, தான் உழைத்தல் என்னும் உண்மையைச் சுத்தி செய்ய வேண்டும். அந்த உண்மையில் நாம் செய்த பாவங்கள் வெந்துபோம். அஞ்ஞானக் குணம் விலகும். சோம்பற் குணம் சாம்பலாகும்.

மகாத்மா காந்தி அவர்கள் எதை முடிக்க எண்ணிக் கொண்டிருந்தார்? எதை வற்புறுத்திச் சொன்னார்? எதைப் பாக்கியாக நமக்கு விட்டுப் போனார்? அதை முடிப்பதுதான் நம்வேலை. அதில்தான் அவர் ஆத்மா சாந்தி. அதை நாம் முடிப்போம். அதுதான் அவருக்கு நாம் காட்டும் நன்றி விஸ்வாசம், பக்தி, கடமை என்று எல்லோரும் சொன்னார்கள். அப்படியே மனதைத் தேற்றி வைராக்கியமும் கொண்டோம். சமய வேறுபாடு, சாதித் துவேஷம் கூடாது. பெருங்கூட்டம் சிறுகூட்டத்திற்கு உதவி செய்ய வேண்டுமே ஒழிய துன்பம் செய்யக் கூடாதென்று பொதுவாகஎல்லோருக்கும்சொன்னார். நமக்கு மட்டும் இந்துக்களாகிய நீங்கள் தீண்டாமையை அறவே நீக்காமல் போனால் உங்கள் இந்து மதமே அழிந்து போகும். உங்கள் சாதிவித்தியாசத்தை நீக்காமல் போனீர்களானால் உங்கள் சாதியே அழிந்து போகு

[தொடர்ச்சி 13ம் பக்கம்]

---

"சூத்திரர்களின் தர்மம் என்னவென்றால் பிராமணர்களுக்குப் பணிவிடை செய்வதும், அவர்களுக்கு அடிமையாயிருப்பதுவும் மிகவும் மோட்சத்திற்கு ஏதுவாகுமென்று கருதி அதைப்படைத்தார். 'அதுவும் அசூயை இல்லாமல் செய்யவேண்டும்''

இதை மந்திரிகள் ஒப்புக் கொண்டாலும் மக்கள் ஒப்புக் கொள்ளலாமா?

---

ஆணும் பெண்ணும் கலந்து பழகுவது, பிறப்பு விகிதத்தைக் குறைப்பதும் என்பதில் அய்யமோ, ஆச்சரியமோ இல்லை.

"கற்பு'' என்ற கால் விலங்கு உடைக்கப்பட வேண்டும். "மற்றவர்கள் என்ன நினைப்பர்'' என்ற கை விலங்கும் உடைத்தெறியப்பட வேண்டும். "குடும்பப் பெண்ணுக் கழகா?'' என்ற சிறைக் கதவைத் தகர்க்க வேண்டும். பிறகு பெண்ணினம், ஆணினத்தோடு கை கோத்து நடந்து புதிய தோர் சமுதாயத்துக்கு வழி கோல "திராவிடநாடு திராவிடர்க்'' காக வேண்டும்.

# ★ தேய்ந்த வாள்! ★

(கே. பாலையா)

★

வாப்பா சோமநாதா! எது இந்த மாலை வேளையில் இவ்வளவு தூரம் வந்தது?

இல்லேண்ணே! நமது வேலப்பரிடம் இந்த ஒரு வாரமாக வாட் போர் பயின்று வருகிறேன். இன்றும் அதற்காகத்தான் புறப்பட்டேன்.

அடே! ஆச்சரியமாய் இருக்கிறதே! உனக்குத்தான் ஏற்கனவே வாட்போர் நன்கு தெரியுமே! இன்னும் என்னப்பா பாக்கி இருக்கிறது?

ஆமண்ணே! எனக்கும் வீரய்யனுக்கும் நாளை மாலை, நமது சேனாதிபதியார் முன்னிலையில் வாட் போர்ப்பந்தயம் வைத்திருக்கிறது. அதற்காக விட்டுப் போன பயிற்சியை மீண்டும் பழக்கத்திற்குக் கொண்டுவரும் முறையில், இந்த ஒருவாரமாகப் பயின்று வருகிறேன்.

அடடே! எதற்காகப்பா பந்தயம் வைத்திருக்கிறீர்கள்?

நமது ஊர் பெரியதனக்காரர் பெண் குயிலி இருக்கிறாள் பார் அண்ணே! அந்தப் பெண்ணை நானும் காதலித்தேன். வீரய்யனும் காதலித்தான்: அந்தப் பெண் நீங்கள் இருவரும் சண்டை செய்யுங்கள்; அந்தச் சண்டையில் யார் வெற்றி அடைகிறீர்களோ அவரையே மணந்து கொள்கிறேன் என்று சொல்லி விட்டது. ஆகவே அதற்காகத்தாண்ணே நாளை சண்டை.

அப்படியானால் நாளை மாலை கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்துதான். சரி! நாளை நானும் வந்து விடுகிறேன். சென்று வா.

மேலே கண்ட உரையாடல் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முந்தி வீரத் தமிழன் ஒவ்வொருவனிடமும், ஒவ்வொரு நீண்ட வாள் இடையிலே தொங்கிக்கொண்டிருந்த காலத்தில் நிகழ்ந்ததெனலாம்.

* *

இதோ 1948 சென்னை மியூசியம்.

ஏப்பா! சோமசுந்தரம்! இந்தக்கத்தியெல்லாம் எதற்காகப்பா இப்படிக் கண்ணாடிப் பெட்டிக்குள் போட்டு வைத்திருக்கிறார்கள்?

அதுதாண்ணே! அந்தக்காலத்தில் நமது ராசாக்களெல்லாம் ஒருவர்க்கொருவர் யுத்தம் பண்ணின கத்தியாமண்ணே!

ஓகோ! அப்படியா? ஏப்பா! இவ்வளவு பெரிய கத்தியே, எப்படியப்பா எடுத்துச்சண்டை செஞ்சுஇருப்பாங்க?

அந்தக்காலத்திலே நம்ம முன்னோர்களெல்லாம் நம்மப்போலவா அண்ணே இருந்திருப்பாங்க? யானைகூட சண்டை சிங்கத்தோட சண்டைஇப்படியெல்லாம் போட்டுக்குவாங்களா மண்ணே!

எந்தம்பி! நாமெல்லாம் இப்போ பெரிய கத்தியா வச்சிருந்தாக்கூட, போலீஸ்காரங்க கண்டா புடிச்சுக்குவாங்களாமல்ல?

ஆமண்ணே! அபாயகரமான ஆயுதம் வச்சிருப்பது சட்ட விரோதமென்று சர்க்கார் சட்டம் போட்டிருக்காங்க அண்ணே.

அடே! நாம எம்பாவச்சிருக்கப்போறம்.

ஏந்தம்பி! எம்மடியிலே 55. செம்பர் பேனாக்கத்தி இருக்குதே! அதுகூட கண்டா புடிச்சிக்குவாங்களா?

எண்ணே; சாவியோட இருக்குதா? சும்மா இருக்குதா?

சாவியோடதாந் தம்பி இருக்குது.

அப்படீண்ணா பரவாஇல்லண்ணே!

இந்த எழவே ஊரிலே சொல்லி இருந்தா நான் கொண்டு வந்தே இருக்கமாட்டேந் தம்பி.

சும்மா இருண்ணே! நம்மே யார் என்ன செய்யப் போறாங்க?

சரி தம்பி! வா போகலாம்.

* *

பண்டைக் காலத்திலே தமிழனாய்ப் பிறந்த ஒவ்வொருவருடைய இடையிலேயும் பலம் பொருந்திய நீண்ட வாளும், கேடயமும், ஈட்டியும், வல்லயங்களும் வீரத்தின் சின்னங்களாக விளங்கின. தமிழன் இன்று கத்தியைக் கண்டு கதறவும், ஈட்டியைக் கண்டு இதைநாம் தொடலாமா? என்று பேசவும், வல்லயங்களும், வில்லாயுதங்களும் நம்மை ஆண்டு கொண்டிருக்கும் ஆண்டவர்களுக்கல்லாது நம்போன்ற சாதாரண மனிதருக்கு உகந்ததா? என்று உரையாடல் நடத்துவதையும் காண்கிறோம். கனமான ஆயுதங்களைக் கவர்ந்து சென்று, வெள்ளைக்கார ஆதிக்கம் கண் காட்சியிலே 'வைத்துவிட்டது. மீதமிருந்த ஆயுதங்களைக் கோவிலிலே வைத்துக் கும்பிடுங்கள்! ஆண்டவன் அருள்புரிவார்! என்று பார்ப்பனீயம் நமக்குப்பறைசாற்றிவிட்டது. நம்முடைய ஆயுதமென்று நம்மைவிட்டுப் பிரிந்ததோ, அன்றே நம்முடைய வீரமும் சென்று விட்டது. வீரம் சென்று கோழைத்தனம் வந்தது. அறிவைப் பறி கொடுத்தோம். ஆணவக்காரர் நம்மை ஆட்டிப்படைத்தனர். அரசோச்சிய திராவிடச் சமுதாயம் அடிமைத் தனத்தின் சிகரமாகி விட்டது. ஆங்கில ஏகாதிபத்தியம் அந்திய கால வணக்கம் சொல்லி விட்டது. அறிவுள்ள திராவிடரால் இந்த நாடு ஆளப்படுகிறது. ஆகவே வீரனின் வெற்றிச் சின்னங்கள், வடநாடு சென்று போரிலே வாகை சூடிய வல்லாயுதங்கள், சேரனின் சிலம்பங்கள், சோழனின் சொருகு கத்திகள், பாண்டியனின் படைக்கலங்கள், இவைகள் யாவும் இன்னும் கண் காட்சியிலே வைத்துக் காண்பித்து அதைக் கண்டுகளிக்கும் தன்மையும் இருக்குமே ஆனால், நம்மை விட மானங்கெட்டதனம்; ரோசமற்றதனம், தன்மானமில்லாத தறுதலைகள், வேறு எந்த நாட்டிலும் இருக்க முடியுமா? ஆங்கில ஏகாதிபத்தியம் அடக்கு முறையினால் நம் ஆயுதங்களைக் கவர்ந்தது. பார்ப்பனீயம் பாப புண்ணியங்களைச் சொல்லிப்பறித்துக்கொண்டது. கண் காட்சியிலே கண்டு களிக்கிறோம்· கோவிலிலே கண்டு கும்பிடுகிறோம். இவைகள் நம் ஏமாளித் தனத்தைக் கண்டு என்ன சொல்லும்? ''ஏ! அறிவு கெட்ட, கோழைத் தனம் படைத்த தமிழா! உனது முன்னோர்கள் கையிலே இருந்து, எதிரிகளின் தலையை எத்தனை கொய்திருப்பேன்; எத்தனை பேர்களின் ரத்தத்தைக் குடித்திருப்பேன்; இன்று என்னை ஏமாளித் தனமாக நின்று வேடிக்கை பார்க்கிறாயே! உனக்கு வெட்கமாக இல்லையா? வீரத்தின் சின்னமாக விளங்கின என்னை, விளையாட்டுப் பொழுது போக்குக்காக வைத்திருக்கிறாயே? உன் அறிவு எங்கே போய் விட்டது? ஆம் என்னை நீ சிறை வைக்க வில்லை. உன் வீரத்தை—உன் லட்சியத்தை-உன் மானத்தை—உன் தன்மானத்தைச் சிறைவைத்து விட்டாய்! எப்பொழுது உன் ஆயுதங்களை காட்சிக்கு வைத்தாயோ, அப்பொழுதே, உன் ஆண்மையும் உலகத்தோர் காட்சிக்குப் போய்விட்டது. உனக்கு மான உணர்ச்சி இருக்குமேயானால், கோவிலிலும், மியூஸியத்திலும் உன் ஆயுதங்களை வைத்து அவமானப் படுத்துவதை அறி. உன் கையிலே அணுக்குண்டிருந்தால் அவைகள் அங்கிருக்கத் தகுதியுடையது தான். உன் நாடும், உன் அரசும் உன்கைக்கு வரும் வரைக்காவது, உன் வீரச்சின்னத்தை வேடிக்கை பார்த்து சிரிப்பதை விடுத்துச் சிந்தி'' என்றுதானே சொல்லும்.

# மது வெறியை ஒழிக்கும் செயல் என்ன?

# மேற்கு அய்ரோப்பிய நாடுகளின் அய்க்கிய சங்கம்.

## முதலாளியரசுகளின் சுரண்டல் சங்கம்.

★

[மயிலை சீனி வேங்கடசாமி]

மேற்கு அய்ரோப்பாவில் உள்ள தேசங்களை ஒன்று சேர்த்து ஒரு அய்க்கிய சங்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்று இப்போது இங்கிலாந்தில் முயற்சி செய்யப்படுகிறது. பிரிட்டிஷ் அயல் நாட்டு இலாக்கா காரியதரிசி எர்னஸ்ட் பெவின் என்பவர் இந்தச் சங்கத்தை ஏற்படுத்த முனைந்திருக்கிறார். அய்ரோப்பா கண்டத்தை மேற்கு அய்ரோப்பா என்றும் கிழக்கு அய்ரோப்பா என்றும் பிரிப்பானேன்? மேற்கு அய்ரோப்பிய நாடுகளை மட்டும் ஒன்று சேர்த்து ஒரு சங்கம் அமைக்க வேண்டுவது ஏன்? கிழக்கு அய்ரோப்பிய நாடுகளை இச்சங்கத்தில் சேர்க்காதது ஏன்? என்னும் விஷயங்களைக் கூர்ந்து ஆராய்ந்து பார்த்தால் இந்தச் சங்கத்தின் அந்தரங்க நோக்கத்தைத் தெரிந்து கொள்ளலாம். இந்த மேற்கு அய்ரோப்பா நாடுகளின் யூனியன்ஏற்படுத்துகிற அந்தரங்கநோக்கம் என்னவென்றால்,1. மேற்கு அய்ரோப்பா நாடுகள் ஒன்று சேர்ந்து அவைகளுக்குச் சொந்தமாக உள்ள ஆசியா ஆப்பிரிக்கா கண்டங்களில் இருக்கிற சுதேச நாடுகளை அடக்கி ஆட்சி செய்து, அக்கண்டங்களின் பொருளாதாரங்களைச் சுரண்டிச் சாப்பிடுவதற்காக ஏற்படுத்தப்படுகிற சங்கம். 2 அன்றியும் ருஷியா தேசத்தை எதிர்த்துப் போராடுவதற்கு ஏற்படுத்தப்படுகிற ஒரு கூட்டுச் சங்கம் என்று நிச்சயமாகக் கூறலாம். மேற்கு அய்ரோப்பிய நாடுகளின் அய்க்கிய சங்கம் என்று. இதற்குப் பெயர் என்றாலும் இதில், வெளிப்படையாகவோ மறைமுகமாகவோ அமெரிக்கா தேசம் முக்கிய பங்கெடுத்துக் கொள்ளும் என்பதில் சிறிதும் அய்யம் இல்லை. இதை விளக்கமாக ஆராய்வோம்.

அய்ரோப்பா கண்டம் மேற்கு அய்ரோப்பா என்றும் கிழக்கு அய்ரோப்பா என்றும் இரண்டாகப் பிரிக்கப்படுகிறது. மேற்கு அய்ரோப்பா நாடுகள் முதலாளித் தன்மையுள்ள நாடுகள். கிழக்கு அய்ரோப்பா நாடுகள் விவசாயிகளையும் தொழிலாளிகளையும் உடைய ஏழைநாடுகள். மேற்கு அய்ரோப்பா நாடுகளுக்குச் சொந்தமாக ஆசியா, ஆப்பிரிகா கண்டங்களிலும் கிழக்கிந்தியத் தீவுகளிலும் மேற்கிந்தியத் தீவுகளிலும் தென் அமெரிக்காவிலும் ஏராளமான பூமிகளும், ஊர்களும், நாடுகளும் உள்ளன. கிழக்கு அய்ரோப்பிய நாடுகளுக்குச் சொந்தமாக வேறுநாடுகள் கிடையா. அன்றியும் கடந்த இரண்டாவது உலகயுத்தத்திற்குப் பிறகு, கிழக்கு அய்ரோப்பிய நாடுகள் ருஷியா தேசத்தின் செல்வாக்குடையனவாய்ப் பொதுவுடைமை நாடுகளாகவோ அல்லது சமதர்ம நாடுகளாகவோ மாறிவிட்டன. மேற்கு அய்ரோப்பிய நாடுகள் பழைய முதலாளித்தன்மையுள்ள நாடுகளாகவும் தமக்குக் கீழ்ப்பட்ட வேறு நாடுகளைச் சுரண்டி உறிஞ்சிப் பிழைக்கும் நாடுகளாகவும் இருந்து வருகின்றன. ஆகவே மேற்கு அய்ரோப்பிய நாடுகளில் பொதுவுடைமைக் கொள்கையோ சமதர்மக் கொள்கையோ பரவாதபடி பார்த்துக் கொள்ளவும், மூன்றாவது உலக யுத்தம் ஏற்பட்டால் முதலாளி நாடுகள் ஒன்று சேர்ந்து ருஷியா தேசத்தை எதிர்த்து நசுக்குவதற்காகவும், இந்த மேற்கு அய்ரோப்பிய யூனியன் ஏற்படுத்தப்படுகிறது. அன்றியும் மற்ற தேசங்களின் பொருளாதாரங்களை உறிஞ்சிக் குடிக்க ஏற்ற வழிகளை ஆராயும் யூனியனாகவும் ஏற்படுத்தப்படுகிறது.

இனி மேற்கு அய்ரோப்பிய நாடுகள் எவை என்பதைப் பார்ப்போம். 1. இங்கிலாந்து (கிரேட் பிரிட்டன்) 2. பிரான்சு தேசம். 3. போர்ச்சுகல் தேசம். 4. டச்சு தேசம் (ஒல்லாந்து தேசம்). 5. பெல்ஜியம். 6. ஸ்பெயின். 7. இத்தாலி. 8. ஜர்மனி என்பன. இவைகளில், இத்தாலியும், ஜர்மனியும் இரண்டாவது மகாயுத்தத்தின் பலனாக, ஆபிரிகா கண்டத்தில் தமக்கிருந்த தேசங்களை இழந்து விட்டன. ஆகவே, இப்போது மேற்கு அய்ரோப்பா நாடுகள் என்பவை, அதாவது முதலாளித்தன்மையுள்ள நாடுகள் மேலே கூறிய ஆறு தேசங்களாகும். இந்த ஆறு தேசங்களும் பெரும் பகுதியான நிலப்பரப்புகளைத் தமக்குச் சொந்தமாக ஆசியாவிலும், ஆபிரிகாவிலும், கிழக்கு மேற்கு இந்தியத் தீவுகளிலும் உடையனவாயிருக்கின்றன. எந்தெந்தத் தேசங்களுக்கு எந்தெந்த நிலப்பரப்பு சொந்தம் என்பதை விளக்குவோம்.

**1. பிரிட்டன்.** இதற்கு ஆசியாக் கண்டத்தில் சொந்தமாகவுள்ள தேசங்கள் இந்தியா, பர்மா, மலேயா, ஹாங்காங், இலங்கை முதலியன. இப்போது இந்தியா, பர்மா, இலங்கை என்னும் மூன்று தேசங்களுக்கும் (சுயராஜ்ஜியம்?) டொமினியன் அந்தஸ்து கொடுக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டபோதிலும்,வியாபாரம் முதலிய பொருளாதாரங்களைத் தன் கையில் வைத்திருக்கிறது. போர்னியோதீவின் வடபகுதியைததன்வசம்வைத்திருக்கிறது. ஆஸ்ட்ரேலியா கண்டம் முழுவதும் இதற்குச் சொந்தம். நியூஜீலாந்து, நிக்கோபார், அந்தமான், லக்ஷத் தீவுகள் முதலியவையும் இதற்குச் சொந்தம். ஆபிரிகா கண்டத்தில் இதற்குச் சொந்தமான தேசங்களாவன: ஆங்கிலோ ஈஜிப்டு சூடான், உகாந்தா, கெனியா, தாங்கநியக்கா நாடு, தென் ஆப்பிரிக்கா அய்க்கிய நாடுகள், நைஜீரியா, ஸோமாலிலாந்து, கோல்டு கோஸ்டு முதலிய பெரும் பகுதி நாடுகள்.

மேற்கு இந்தியத் தீவுகளில் ஜமெய்க்கா தீவு, பாமனி தீவுகள், திரினிடாட் முதலிய தீவுகள் சொந்தமானவை.

தென் அமெரிக்காக் கண்டத்தில் கயானா தேசம்.

இவ்வாறு பூனையவ்வளவு உள்ள பிரிட்டிஷ் தீவுக்கு யானையளவு இடங்கள் உலகத்திலே சொந்தமாக உள்ளன.

**2. பிரான்சு தேசம்.** இதற்குச் சொந்தமாக ஆசியாக் கண்டத்தில் உள்ள தேசம் இந்து சீனா என்பது. இது பிரான்ஸ் தேசத்தைவிடப் பெரியது, பர்மா தேசத்தைவிட மிகப் பெரியது. காரைக்கால், புதுச்சேரி முதலிய இடங்களும் உள்ளன.

ஆப்பிரிக்காக் கண்டத்தில், அல்ஜீரியா, மொராக்கொ, துனிஷியா, பிரெஞ்சு மேற்கு ஆப்பிரிகா, ஸோமாலிநாந்து, மடகாஸ்கர் தீவு, பிரஞ்சு ஈக்வடோரியல் ஆப்பிரிக்கா, முதலிய பெரும் பகுதிகள், தென் அமெரிக்காக் கண்டத்தில் பிரெஞ்சு கயானா பிரதேசம். பிரிட்டனைப் போலவே, பூனையளவுள்ள பிரான்சு தேசத்திற்கு யானை அளவுள்ள நிலப்

[தொடர்ச்சி 12ம் பக்கம்]

**மதுவை ஒழிப்போர் மதுவுண்ணாதிருத்தல்.**

# காந்தியாரைக் கொன்றது கோட்ஸேயல்ல, கடவுள்!

★

[கே. வி. கே. சாமி]

உத்தமர் காந்தியார் உயிர் துறந்தார். இல்லை! சுட்டுக் கொல்லப் பட்டார். அதுவும் ஒரு குண்டினால் அல்ல. மூன்று குண்டுகளால். தன்னுடைய கருத்துக்கு மாற்றுக் கருத்துடையோராலா? இல்லை! தான் எந்த இந்து மதத்தை உலகத்திலேயே பரப்பவேண்டும் என்ற எண்ணத்துடன் நாட்டில் உலாவி போற்றிப் புகழ்ந்து, வழிபட்டு வந்தாரோ; அதே இந்து மதத்தைச் சேர்ந்தவனால். எந்த ராமராஜ்யத்தை நிலை நிறுத்தவேண்டும் என்ற மனப்பான்மையுடன் அல்லும் பகலும் அயராது ராமபஜனை பாடி வந்தாரோ, அதே ராமனுடைய பரம் பரையில் வந்த கோட்சே என்ற மராட்டியப் பார்ப்பனனால் சுட்டுக் கொல்லப் பட்டார். அந்தோ பரிதாபம்!

உத்தமர் காந்தி அடிகளைக் கொன்ற கோட்சே மராட்டியப் பார்ப்பனன் என்பது பலருக்குத் தெரியாது என எண்ணுகிறேன். ஏனெனில் அந்த அளவுக்கு அம்பலப் படுத்தக் கூடிய பத்திரிக்கைகளெல்லாம் பார்ப்பனன் என்ற பதத்தை அப்படியே இருட்டடிப்புச் செய்து விட்டது. (திராவிடர் கழகப் பத்திரிக்கைகளைத் தவிர) பத்திரிக்கைகள் நினைத்தால் தாம் எண்ணியவாறெல்லாம் செய்யமுடியுமே! இல்லாவிட்டால் கட்டுப்பாடாகப் பார்ப்பனப் பத்திரிக்கைகளெல்லாம், உத்தமரைக்கொன்றவன் படுபாவிபார்ப்பனன் தான் என்பதை மக்களுக்குத் தெரியப் படுத்தாமல் இருந்திருக்க முடியுமா? இறைவன் திரு அடிகளுக்கு மக்களைக் கொண்டுபோய்ச் சேர்க்கும் அந்தஸ்து தங்களுக்கு இருக்கிறது; தங்களால் தான் முடியும் என மக்களை முட்டாள்களாக்கி வைத்திருக்கிற பார்ப்பனீயத்திற்கு இருட்டடிப்பு வேலையா? பிரமாதம். உத்தமர் காந்தியார் பார்ப்பனனால் சுட்டுக் கொல்லப் பட்டார் என்பதை மறைத்தது மட்டுமல்ல, உத்தமரைக் கொன்ற மத வெறியன் கோட்சேயைக் கடவுளாக்கினாலும் ஆக்கிவிடுவர். அதே போல் பேசவும் ஆரம்பித்து விட்டார்கள். அதற்குத் தகுந்த வசதிகளும் அவர்களிடம் இருக்கின்றன. அரசு அவர்களிடம். பத்திரிக்கை பலம் அவர்களிடம். மற்றும் செய்தி, ஒலிபரப்பி நிலையம் அவர்களிடம். கின்னரர்கள் கிம்புருடர்கள் அவர்களிடம். நாயன் மார்கள் ஆள்வாராதிகள் அவர்களிடம். அடியார்கள் அவர்களிடம். நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள் முப்பத்தி முக்கோடி தேவர்கள் அவர்களிடம், என்? அதிகம் கூறுவானேன். கடவுள் கூட அவர்கள் பக்கம் இருக்கிறார். இவ்வளவு பலத்தை வைத்துக் கொண்டு கோட்சேயை என்? கடவுளாக்க மாட்டார்கள்.

“ஏ! பக்தா! எழுந்திரு. கொறட்டை விட்டா தூங்கிக் கொண்டிருக்கிறாய்! உணர்ச்சி அற்றவனே எழுந்திரு! காந்தியாரைக்கொன்றவன் இந்துமதத்தவன். ஓர் மதவெறியன். மராட்டிய பார்ப்பனன் என்றெல்லாம் திராவிடர் கழகத்தவர்கள் பேசியும் எழுதியும் வருவது உனக்குத் தெரியாதா? எனது அசல் படைப்பில் ஜனித்த பிராமணோத்தமர்களாகிய உங்களை கேவலம் இந்த சூத்திரப்பயல்கள் திட்டுவது தகுமா? கொலைகாரனாக்கியது முறையா? அப்பப்பா என்னால் பொறுக்க முடியவில்லையே! மகனே! இதோ வரம். காந்தியாரைக் கொன்றது பார்ப்பனனுமல்ல, கோட்ஸேயுமல்ல. பார்ப்பனர்களே மேல் சாதியாக இருப்பதால் அச்சாதிப் பார்ப்பனப்பெண்ணின் வயிற்றில் பிறந்து, வளர்ந்து, கோட்சேயாக நானே (கடவுள்) நாட்டில உலாவினேன். காந்தியாருக்கு முடிவு காலம் நெருங்கியது கொன்றேன். கொன்றது சரியா? பிரபோ! என்று கேட்டுவிடாதே. எனது பக்தன் காந்தியை உலகம் புகழவேண்டும். அவர் மகிமையை மக்கள் உணரவேண்டும் என்பதற்காகவே சுட்டுக் கொன்றேன். என் பக்தனை என் இருப்பிடத்திற்கு அழைத்துச் சென்று விட்டேன். இங்கு (மேல்உலகத்தில்) உன்னத பதவியில்தான் இருக்கிறார் காந்தியார். எனவே அவரைப்பற்றி எவரும் கவலைப்பட வேண்டாம். கோட்சேயை நொந்து கொள்ளவும் வேண்டாம். நானே கடவுள்—கோட்சே.”

இவ்விதமாக இன்று இரவு என் கனவில் கடவுள் என்னிடம் கூறி மறைந்து விட்டார் என பட்டேல் ஒரு கூட்டத்தில் பேசிவிட்டால் போதும். உடனே (திராவிடர் கழகப் பத்திரிகைகளைத் தவிர) பத்திரிகைகளெல்லாம் தனிச் சிறப்புடன் கொட்டை எழுத்துகளில் பத்திரிகை முழுவதும் பிரசுரித்துவிடும். மக்களும் அப்படியா? என்ன ஆச்சரியம்! என மதிமயங்கிவிடுவர். மறுநாள் காலை இந்து பத்திரிகை தலையங்கம் தீட்டிவிடும். பொது மக்களே! சென்னை மைலாப்பூர் கபாலீசுவரர் கோவில் பக்கத்தில் ஓர் கோவில் கட்டி, லட்ச ரூபாய் செலவில் கோட்சேயின் சிலைசெய்து, அக்கோவிலில் குடியிருக்கச் செய்ய வேண்டும். அதற்குப் பத்து லட்சம் ரூபாய்கள் தேவைப்படலாம். முதன் முதலாக இசைவாணி எம். எஸ். சுப்புலட்சுமி அவர்கள் கச்சேரி செய்து நிதி திரட்டித் தருவதாக வாக்களித்துள்ளார்கள். தமிழ் மக்களே! மறந்து விடாதீர்கள். கொஞ்சம் கச்சம் கட்டி நிதி திரட்ட முயலுங்கள் என எழுதிவிடும். அதன் மறுநாள் முதன் மந்திரி ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் தலைமையில் கோட்சே நிதிக்கமிட்டி ஆரம்பிக்கப்படும். கேட்கவா வேண்டும். பணம் குவிய கோட்சே சிலை செய்து கோபுரத்திலும் குடியிருக்கச் செய்து விடுவார்கள். திறப்புவிழாவிற்குத்தான் இருக்கவே இருக்கிறார் ராஜகோபாலாச்சாரியார். கச்சேரிக்கு M. S. இருக்கிறார். கவிகள் புனைய இராமலிங்கங்கள் இருக்கிறார்கள். காலில் விழுந்து கும்பிட டி. கே. சிகள் இருக்கிறார்கள். விழாவும் கனஜோராக முடியும்.

இப்படியும் செய்வார்களா? மக்கள் தான் நம்புவார்களா! என அவசரத்தில் கூறி விடாதீர்கள். உத்தமர் காந்தியார் உடல் எரிக்கப்பட்டு வீழ்ந்த சாம்பலை எடுத்துக் கடலிலே கரைக்க ஒரு வெள்ளைக்காரக் கவர்னர் ஒரு ஆகாய விமானத்தை எடுத்துக்கொண்டு சாம்பலை எடுக்க டில்லிக்கு ஓடியது இந்த இருபதாம் நூற்றாண்டுதானே! வெள்ளைக்காரனை மடையன் என்கிறீர்களா? இல்லை. அவருக்குத் தெரியும் மடைமை என்று. ஆனால் மக்களுக்கு ஏற்ற முறையில் தானே அவரால் நடிக்க முடியும். அப்படி நடித்தால் தானே உங்கள் அன்பிற்குப் பாத்திரமானவராவார்.

இப்போப்பட்ட மனதை உடைய மக்களைக் கொண்ட நாட்டில் எது தான் செய்யாமல் இருக்கும் பார்ப்பனீயம். இதற்கு முன்பும் பல அநீதிகளைச் செய்து விட்டு ஆண்டவன்மீது பழிகளைச் சுமத்தி விட்டே இன்று வரையிலும் உல்லாசமாக உயிர் வாழ்ந்து வருகிறது பார்ப்பனீயம்.

நந்தனாரைத் தூக்கி நெருப்பில் எறிந்து விட்டு ஜோதியோடு ஜோதியாக ஆண்டவனிடம் சென்று விட்டதாகக் கூறி விட்டார்கள். ராமலிங்க சுவாமிகளை அடித்துக் கொன்றுவிட்டு கடவுள் ஏற்றுக்கொண்டார் எனக்கூறி விட்டார்கள். மதுரை திருமால் நாயக்கரை சுரங்கத்திற்குள் அழைத்துச் சென்று அடித்துக்கொன்று விட்டு, சுரங்கத்தின் வழியே கடவுளிடம் சென்று விட்டதாக மக்களிடம் கூறியேமாற்றியது, உத்தமர் காந்தியாரைக் கொன்ற கோட்சேயின்

(தொடர்ச்சி 12-ம் பக்கம்)

ரோஜா முத்தையா

# கருஞ்சட்டைப் படை மீது தடை!

## பெரியார் வீடு, ஆபீஸ், மற்றும் பல நகரிலும், நாட்டிலும் சோதனை.

★

பொதுமக்கள் சமாதானத்துக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய ஸ்தாபனம் என்பதாகக் கூறி, கிரிமினல் சட்ட திருத்தம் 16-வது பிரிவின் கீழ் மார்ச் 2-தேதி யன்று கருஞ்சட்டை அமைப்பின் மீது சென்னை சர்க்கார் தடை விதித்ததை ஒட்டி சென்னை நகரிலும், வெளியூர்களிலும் சிற்சில இடங்கள் போலீசாரால் சோதனையிடப்பட்டுள்ளன.

★

**ஈரோட்டில் 3-3-48.**

இன்று இரவு 7-மணிக்குப் போலீசார் பெரியாரின் அண்ணார் ஈ. வெ. கிருஷ்ணசாமி அவர்களைப் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்று பெரியாரவர்களின் மாளிகையைச் சோதனையிடவேண்டு மென்று கூறி அவரையும் அழைத்துக் கொண்டு ஒரு சர்க்கிள், இரண்டு சப்இன்ஸ்பெக்டர்கள், சி. அய். டி. ஆகியோர் பெரியாரவர்களின் மாளிகைக்குப் போய் பூட்டையுடைத்து உள் நுழைந்து சோதனை யிட்டனர். ஒரு போட்டோப் படத்தையும், ஒரு சொற்பொழிவுத் திரட்டையும் ஒரு கை எழுத்துப் பிரதியையும் கைப்பற்றிச் சென்றிருக்கின்றார்கள்.

இரவு 10-மணிக்குப் பெரியாரவர்களின் சொந்த ஆபீஸ் சோதனையிடப்பட்டு சில "பைல்" களை எடுத்துச் சென்றிருக்கிறார்கள்.

**சென்னை நகரில் 2-3-48 மாலை.**

1. ஜார்ஜ் டவுன் சுங்குராம செட்டித் தெரு தோழர் C. D. T. அரசு (சென்னை மாவட்டத் திராவிடர் கழகத்தலைவர்) அவர்களுடைய ஆபீசும், "திராவிடன்" பத்திரிகை நிலையமும்,

2. பார்க் டவுன், பொம்மு செட்டித் தெரு, தோழர் அரசு அவர்களுடைய வீடும்,

3. மயிலை, பிராடீஸ்ரோடு, தோழர் எம். கே. தங்கவேலர் (மயிலை திராவிடர் கழகத் தலைவர்) அவர்களுடைய வீடும்,

4. பெரிய மெட்டு, ஏகாம்பர குமாரகுருதெரு தோழர் கே. ஆரியசங்கரன் அவர்களுடைய வீடும்,

5. வண்ணாரப்பேட்டை, மாடசாமி நாடார் தெரு, தோழர் எம். கே. அண்ணாமலை அவர்களுடைய வீடும், வடசென்னைத் திராவிடக் கழக நிலையமும்,

6. சைதாப்பேட்டை, கூத்தாடும் பிள்ளையார் கோயில் தெரு, திராவிட இளைஞர் கழக நிலையமும்,

சோதனையிடப்பட்டு கருப்புச் சட்டைகளும் "மினிட்" புத்தகங்களும் கைப்பற்றப்பட்டன.

**கோவில் பட்டியில் 2-3-48.**

திராவிடர் கழகச் செயலாளர் தோழர் எஸ். அருணாசலம், தோழர் வள்ளி முத்து, பாலராஜ் ஆகியோர் வீடுகள் போலீசாரால் சோதனையிடப்பட்டு திராவிடர் கழகம், திராவிட இளைஞர் கழகம் ஆகியவற்றின் நடவடிக்கைப் புத்தகங்கள் எடுத்துச் செல்லப்பட்டன.

**மதுரையில் 3-3-48.**

இன்று காலையில் இயக்கத் தோழர்கள் வீடுகள் வாசகசாலைகள் சோதனையிடப்பட்டுச் சில இயக்கப் புத்தகங்களை எடுத்துப் போனதோடு தோழர்களான எஸ். முத்து, எஸ். பழனிவேலு, கே. எஸ். இராசமான் ஆகியோரைப் போலீஸ் பாதுகாப்பில் வைத்திருக்கின்றனர்.

**திருச்சியில் 2-3-48.**

இன்று நடுஇரவில் ரிசர்வ் போலீஸ் லாரியுடன் சென்று ஆளில்லாதபோது புகுந்து தோழர் எஸ். பிரான்சிஸ் வீட்டில் சோதனையிட்டுக் கருப்புத் துண்டு, மாலைகளையும் "பாரம்" பேட்ஜ்களையும் எடுத்துச் சென்றனர்.

பொன்மலையில் 2-3-48 நடுஇரவில் தோழர் கைலாசம் வீட்டில் சோதனை. கைப்பற்றியது கருப்புச் சட்டையும் தாள்களும்.

**சேலத்தில் 3-4-48.**

செவ்வாய்ப்பேட்டைச் சுயமரியாதைச் சங்கம் சோதனை. கைப்பற்றியது ஏமாற்றம்.

அரிசிப்பாளையம்திராவிடர் கழகம் சோதனை. கைப்பற்றியது ஏமாற்றம்.

**விருதுநகரில் 3-3-48.**

தோழர்களான ஏ. வி. பி. ஆசைத்தம்பி, என். இராமசாமி, வி. ஏ. எம். வெள்ளையப்ப நாடார், பி. ரெத்தினசாமி ஆகியோர் வீடுகள் சோதனை. கைப்பற்றியது முதலிருவர் வீடுகளில் சில கடிதங்கள்.

**துறையூரில் 3-3-48.**

நடுஇரவில் ஆயுதந் தாங்கிய ரிசர்வ் படையுடன் சென்று தோழர்களான து. வீ. நாராயணன், டி. எம். பாலசுந்தரம், கி. கு. கிருஷ்ணசாமி, டி. ஆர். வீரண்ணன், ஞானசுந்தரம் ஆகியோர் வீடுகள் சோதனை. கைப்பற்றியது நாராயணன் வீட்டில் மட்டும் புத்தகமும் கையெழுத்துப் பிரதியும். மற்ற இடங்களில் ஏமாற்றம்.

**திருப்பூரில் 3-3-48.**

திராவிடர் கழகம் சோதனை. கிடைத்தது ஏமாற்றம்.

**திண்டிவனத்தில் 4-3-48.**

காவேரிப்பாக்கம் திராவிடர் கழகம், தோழர்களான தங்கவேல், பூபால், கெங்காதரன் வீடுகள் சோதனை. கைப்பற்றியது தஸ்தாவேஜுகளும் ரசீதுப் புத்தகங்களும்.

திண்டிவனம் திராவிடர் கழகமும், தோழர்களான அப்பாண்டநாதன் பழனி ஆகிய இருவரும் சோதனை. கைப்பற்றியது தஸ்தாவேஜுகளும் ரசீது புத்தகங்களும்.

**திண்டுக்கல்லில் 3-3-48.**

கழகத் தலைவர் தோழர் ஏ. கெ. ஏ. சிதம்பரம் வீடும், தோழர் மத்திரன் வீடும், பகுத்தறிவு வாசகசாலையும் சோதனை. கைப்பற்றியது ஏமாற்றம்.

**கடலூரில் 3-3-48.**

பகுத்தறிவுக் கழகம் சோதனை. கைப்பற்றியது கருஞ்சட்டைப் படை என்றெழுதியிருந்த திரை.

**வேலூரில் 3-3-48.**

தோழர் வி. திருநாவுக்கரசு வீட்டில் கருப்புச் சட்டைகளையும், தோழர் சி. பி. சின்னராசு வீட்டில்

(தொடர்ச்சி 9ம் பக்கம்)

கொலை மேற்கொண்டாரில் கொடிதே! அலைமேற்கொண்டு
அல்லவை செய்தொழுகும் வேந்து.

—திருவள்ளுவர்.

குடி அரசு

6—3—48 சனிக்கிழமை.

# வரப்போகிறது! வந்தே விட்டது! ஜே! ஜே!

★

வரப்போகிறது! வருகிறது! அதோ வருகிறது! இதோ வருகிறது! என்று இடியும் மின்னலுமாயிருந்த, முதுகில் குத்தும் அடக்குமுறைப்பாணம் மழை, குளிர்காற்று வீசி, தூரலாயிருந்து, பெருமழையாய்த் திராவிடக் கழகத்தின் மீது பெய்தே விட்டது!

அதாவது காங்கரஸ் சர்க்கார் ஏன்? சுயராஜ்ஜிய அதுவும் ஜனநாயக சுயராஜ்ஜிய சர்க்கார் "கருப்புச்சட்டைப் படை சட்டவிரோதமானது என்று உத்தரவு போட்டு விட்டது. இது முதல் சடங்கு.

பெரியாரவர்களின் வீடும், காரியாலயமும் சென்னையிலும் பிற ஊர்களிலுமுள்ள பல காரியாலயங்களும் சோதனையிடப்பட்டிருக்கிறது. இது இரண்டாவது சடங்கு.

இனி மற்ற சடங்குகளும் நடைபெறலாம்.

காந்தியாரைக் கொலை செய்தவன் ஆரியன். அவனைத் தூண்டி விட்டது இந்து (மத) மகாசபை. அதற்குப் பட்டாளம் ராஷ்டிரிய சுயம் சேவக் சங்கம். அதில் 100க்கு 90 அங்கத்தினர் சிப்பாய்கள் ஆனவர்கள். பிராமணர்கள். (பார்ப்பனர்கள்) அதை ஆதரித்து வந்தவை (தேசீய) காங்கரஸ் ஏடுகள்.

காந்தியார் கொலை நடந்த உடன் கலகம், குழப்பம், கொள்ளை, கொளுத்தல் செய்தவர்கள், ஆதரித்தவர்கள், காங்கரஸ் பக்தர்கள்—காங்கரஸ் பக்தர்களின் குடும்பங்கள்.

அதனால் துன்பமும், தொல்லையும், நட்டமும், உதையும் பட்டவர்கள் முஸ்லிம்கள். கலவரத்தை அடக்கபபாடுபட்டவர்கள் திராவிடக் கழகத்தார்.

இந்த நிலையில் சர்க்கார் தேசியப் பத்திரிகைகள் மீது நடவடிக்கை எடுக்காமல், காங்கரசை சட்டவிரோதமான ஸ்தாபனமாக ஆக்காமல், திராவிடக் கழகத்தைச் சேர்ந்த ஒரு தொண்டர் கூட்டத்தைச் சட்ட விரோதமான ஸ்தாபனமாக ஆக்கி இருக்கிறது.

காரணம்? காந்தியைக் கொன்ற கூட்டத்தின் செல்வாக்கு என்பதைத் தவிர வேறு ஒன்றும் அல்ல என்றுதான் சொல்லவேண்டும்.

"சுயராஜ்ஜியம்" வந்தால் இப்படித்தான் நடக்கும் என்று 'குடி அரசு', 'விடுதலை' சொன்னது நிஜமாய் விட்டது.

சீக்கிரம் திராவிடக் கழகத்துக்கும் அடக்கு முறை வரலாம்! 'விடுதலை', 'குடி அரசு'ம் நிறுத்தப்படலாம்! பெரியார் அவர்களும் ஒடுக்கப்படலாம்.

காந்தியார் கொலையுண்டு செத்த பிறகே "உலகம்" இருக்கிறது என்றால் திராவிடக் கழகம், 'குடி அரசு', 'விடுதலை' ஆகியவை அடக்கப்பட்டு, நிறுத்தப்பட்டு, ஒடுக்கப்பட்டுப் போவதாலா, பெரியார் அவர்களை ஒடுக்குவதாலா "உலகம்" முழுகி விடப் போகிறது?

"உலகம்" அதனுடைய இயற்கை வேகத்துக்கு மேலாகச் சற்று வேகமாக முன்னேறவேண்டுமானால் இப்படிப்பட்ட அடக்குமுறைச் சவுக்குகள், கொலை, கொள்ளை, கொடுமை முள் குத்தல்கள் ஏற்பட்டுத்தான் ஆக வேண்டும்.

காந்திக்கு ஜே!
மகான் காந்திக்கு ஜே!
கொலையுண்ட காந்திக்கு ஜே!
கொலை செய்த கோட்சேக்கு ஜே!
அவன் ஜாதிக்கு ஜே!
அவன் மதத்துக்கு ஜே!
அவனுக்குத் தூண்டுகோலாயிருந்த சங்கம், ஸ்தாபனம், மெம்பர்கள், மந்திரிகள் ஆகியவர்களுக்கும் ஜே! ஜே!

---

### ஆழ்ந்த அநுதாபம்

நமது பட்டி வீரன் பட்டித் தோழர் டபிள்யூ. பி. ஏ. சவுந்திர பாண்டியன் அவர்களின் தாயார் தமது 74-வது வயதில் இயற்கையடைந்தமைக்கு நமது ஆழ்ந்த அநுதாபத்தைத் தோழர் சவுந்திர பாண்டியன் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

# படையும், தடையும்.

## பெரியார் ஈ. வெ. ரா. அறிக்கை.

### நிலைமையில் மாற்றமில்லை.

கருஞ்சட்டை பற்றி சர்க்காரின் தடையுத்தரவு சம்பந்தமாக பெரியார் ஈ. வெ. ராமசாமி அடியிற்கண்ட அறிக்கையை விடுத்துள்ளார்:—

நம் இயக்கத்தில் திராவிடக் கழகத்தில் உள்ளோருக்கு கருஞ்சட்டை அணியவேண்டுமென்று வேண்டுகோள் விட்டதானது திராவிட சமுதாயத்துக்கு இருந்துவரும் சமுதாய இழிவு நீக்கிக் கொள்ளும் உணர்ச்சியை ஞாபகப்படுத்தவேண்டும் என்பதற்கு ஆகும். இதைக் கழக அங்கத்தினர் பலரும் மற்றும் சில திராவிடா களும் ஆணும் பெண்ணும் ஆதரித்து அணிந்து வருகிறார்கள்.

இந்தப்படியாகக் கருஞ்சட்டை அணிபவர்களுக்கு எந்த வித நிபந்தனையோ எந்தவித ரிஜிஸ்டரோ சேனை போன்ற உடையோ யூனிபாரமோ அணி வகுப்போ ஆயுதமோ மற்றும் இவை போன்ற ஓர் சேனைக்கோ படைக்கோ உள்ள பயிற்சிகளோ மேற்கொண்டது கிடையாது.

இருப்பினும் சென்னை அரசாங்கம் இதை ஒரு அமைப்பாகக் கருதி சட்ட விரோதமாக்கி யிருக்கின்றது என்ற போதிலும் நான் திராவிடப் பொது மக்களுக்கு அடிக்கடி தெரிவித்து வருவதுபோல் இது விஷயத்தில் நம் கழக அங்கத்தினரும் திராவிடப் பொது மக்களும் பொறுமையைக் கையாண்டு சாந்தமும் சமாதானமுமாய் நடந்துவர வேண்டுமாய் வேண்டிக்கொள்ளுகிறேன். இதற்கு மாறாக எங்காவது பயிற்சி அணி வகுப்பு இருக்குமானால் அதைக் கண்டிப்பாக நிறுத்திவிடவேண்டும் என்பதைத்தவிர, இந்த உத்தரவினால் நமக்குள் எவ்வித மாறுதலும் ஏற்பட்டு விட்டதாகக் கருத வேண்டாம் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை,
4—3—48.

ஈ. வெ. ராமசாமி.

(7ம் பக்கத் தொடர்ச்சி)

கருப்புச் சட்டைகள், தீப் பொறி பத்திரிகைகள் பல கடிதங்களையும், தோழர் மோகனராசு வீட்டில் கருப்புச் சட்டைகள் கடிதங்களையும் சோதனையிட்டுக் கைப்பற்றினர்.

**செங்கற்பட்டில் 4-3-48.**

தோழர் எம். சின்னையா வீடு சோதனை. கிடைத்தது ஏமாற்றம். தமிழக உணவு விடுதி சோதனை. கைப்பற்றியது சட்டை, புத்தகம்.

**காஞ்சிபுரத்தில் 3-3-48.**

புத்தேரித் தெரு திராவிடர் கழகத்தையும் பிறவற்றையும் சோதனையிட்டுக் கொண்டிருக்கின்றனர்.

**சோழவந்தானில் 4-3-48.**

தோழர் ஆவடையப்பன் வீடு நேற்றிரவில் சோதனை. கிடைத்தது ஏமாற்றம்.

**ஆலந்தூரில் 4-3-48.**

தோழர் எம். கன்னியப்பன் வீடு சோதனை. கைப்பற்றியது சட்டையும், கொடியும், சந்தாப் புத்தகமும்.

★

## சட்டசபையில் ராகவமேனன்

மந்திரிகள் அடிக்கடி சுற்றுப்பிரயாணம் செய்வதால் முக்கிய அதிகாரிகள், மந்திரிகளை வரவேற்பதில் ஈடுபட வேண்டியிருக்கிறதே தவிர, வேறு வேலைகளைக் கவனிக்க முடிவதில்லை.— இத்தகைய (?) சுற்றுப்பிரயாணங்கள் அவசியமில்லை.

## பெயரைச் சொல்லாதே!

★

[விளக்குமாறு]

புடலங்காய் விற்பவன் ஒருவன் தெருவில் எடுத்துக்கொண்டு போகின்றான். நமக்கு அவன் பழக்கமில்லை. அவன் பெயர் தெரியாது. அப்போது நாம் என்ன செய்கிறோம்? தெருவில் நின்று 7 வயதுச் சிறுமிகூட ஏ! புடலங்காய்......! என்று தானே கூப்பிடுகிறது. கத்தரிக்காய் விற்பவனைக் கண்டால் ஏ! கத்தரிக்காயி......! என்று தான் கூப்பிடுகிறோம். அதுபோலவே செருப்புத் தைப்பவனைப் பார்த்துக்கூட ஏ! செருப்பு......! என்றுதான் கூவுகிறோம். மற்றும் ஏ! மூட்டை...! ஏ! கூடை......! ஏ! தட்டு......! ஏ! சட்டி......! ஏ! பானை......! இப்படி எத்தனையோ விதமாகச் சாமான் பெயரைச் சொல்லிக் கூப்பிடுவது தானே தமிழர்களுடைய வாடிக்கை.

இப்படியிருக்க நமது கனம் மந்திரிகளைப் பார்த்து மட்டும், அவரவர் பெயர்களைச் சொல்லிக் கூப்பிட்டால் அவர்களுக்குக் கோபம் வராதா? தவிரவும் மரியாதையாகவாவது இருக்கிறதா? அது அவர்களின் கனத்திற்கு மதிப்புக் குறைவு என்பது ஏன் இந்த எம். எல். ஏக்களுக்குத் தெரிவதில்லை. இவ்வாறு எண்ணுகிறார் சட்டசபைத் தலைவர்.

மந்திரிமார்களை எம். எல். ஏக்கள் அவர்கள் வீட்டில் சென்று, ரகசியமாகவோ வெளிப்படையாகவோ சந்திக்கும்போது எம். எல். ஏக்கள் எப்படி வேண்டுமானாலும் கூப்பிடலாம். டா! டே! கூடப் போடலாம். அந்தப் பழக்கம் சட்டசபையிலும் வரலாமா? என்றெண்ணுகிறார் சபைத் தலைவர்.

புடலங்காய்க்காரன் தெருவில் போய்க் கொண்டிருக்கும்போது ஏ! புடலங்காய்.........! என்று கூப்பிடுவதைத் தான் அனுமதிப்பானே தவிர—அனுமதிக்க முடியுமே தவிர, அவன் விற்பனைக்காக வீட்டுக்குள் நுழைந்த பிறகு ஏ! புடலங்காய் என்று கூப்பிடுவது சரியானதாகுமா? பெயரைத் தெரிந்து கொண்டு விட்டால் பெயர் சொல்லிக் கூப்பிடுவோம். இல்லாவிட்டால் என்னப்பா! என்னய்யா! என்றுதானேகுறிப்பிடுவோம். இது போலச் சட்டசபையிலே மந்திரி

களைக் குறிப்பிடும்போது பெயர் சொல்லி அழைத்தார்களாம் சில எம். எல். ஏக்கள். அதற்குச் சபைத் தலைவர் இனிமேல் மந்திரிகளைப் பெயர் சொல்லி அழைக்காதீர்கள், அவர்களின் இலாக்காப் பெயர்சொல்லி அழையுங்கள் என்று உத்தரவு போட்டிருக்கிறார்.

இந்த உத்தரவு அமுலுக்கு வந்தால்சட்டசபையில் எப்படிஎப்படி மந்திரிகளைக்குறிப்பிடுவார்களோ? இப்போது எப்படிச் சொல்ல முடியும்? சுப்பராயனைக் குறிப்பிடும்போது (காங்கரஸ்காரர்கள் பாஷையில்) செந்தலைப் பூச்சி! என்றோ அல்லது மிலிட்டரி! என்றோ கூப்பிடலாம். அவினாசியாரைக் குறிப்பிடும்போது டப்பா டமாரம்! என்றோ, பள்ளிக்கூடம்! என்றோ கூப்பிடலாம். டாக்டர் ராஜனைக் குறிப்பிடும்போது சாப்பாடு! என்றோ வயக்காடு! என்றோ குறிப்பிடலாம். பக்தவத்ஸலத்தைக் குறிப்பிடும்போது ரிப்பேர்! என்றோ பழுதுபார்! என்றோ குறிப்பிடலாம். கோபால் ரெட்டியை ரூபாயணாப் பைசா! என்றோ வெள்ளையப்பன் என்றோ குறிப்பிடலாம். சந்திரமவுலியைக் குப்பைக்கூளம்! என்றோ முனிசிபாலிட்டி! என்றோ குறிப்பிடலாம். இப்படி இன்னும் எத்தனை எத்தனை வகையாகக் கூப்பிடப் போகிறார்களோ தெரியவில்லை. நான் தெரு கூட்டுபவன். ஆதலால் இனிமேல் என்னை விளக்குமாறு என்றே கூப்பிடப் போகிறோம் என்கிறீர்களா? கூப்பிடுங்கள்! நான் விரும்பாத போனாலும் சட்டசபைத் தலைவருக்காவது மதிப்புக் கொடுக்க வேண்டுமல்லவா?

---

# காந்தியார் மறைவுக்கு அநுதாபம்—கண்டனம்.

## திராவிடப் பெருமக்களின் கண்ணீரும் தெளிவும்.

★

திராவிடத் தந்தை பெரியாரவர்கள் பிறப்பித்த ஆணைக்கிணங்கி, காந்தியாரவர்கள் இயற்கைக்கு விரோதமாக மரணமாக்கப்பட்டது குறித்து அநுதாபப்படவும், கொலைச் சம்பவத்தைக் கண்டிக்கவும் 29—2—48ம் நாள் ஞாயிற்றுக்கிழமையன்று ஆங்காங்கே கூட்டமாகக் கூடி ஆடம்பரமின்றிச், சொற்பொழிவின்றிப் பெரியாரவர்கள் வெளியிட்ட தீர்மானத்தைக் கூட்டத் தலைவர் படிக்க, ஒரு நிமிஷம் மவுனமாக நின்று திராவிடப் பெருமக்கள் தமது ஆழ்ந்த அநுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டனர்.

அநுதாபம்—கண்டனம்—படிப்பினை—ஆசை என்ற பிரிவிலடங்கிய [21—2—48 குடி அரசில் வெளிவந்தது] அத்தீர்மானம், திராவிடர் கழக மத்திய நிலையத்துக்கும், தோழர்களான தேவ்தாஸ் காந்தி, பண்டித ஜவஹர்லால்நேரு ஆகியோருக்கும் அனுப்பப்பட்டது.

இக்கூட்டம் நடந்த ஊர்கள், அக்கூட்டத்தின் தலைவர்கள் பெயர்கள் மட்டும் இங்கே வெளியிடப்படுகிறது:

★

(3ம் பத்தித் தொடர்ச்சி)

தஞ்சை ஜில்லா வேளாங்கண்ணித் திராவிடர் கழகம்.

திருநெல்வேலி ஜில்லா தூத்துக்குடி நாகம்மாள் ஞாபகார்த்த சங்கம்.

சேடர்பாளையம் திராவிடர் கழகம்.

இராமநாதபுரம் ஜில்லா கல்லூரணி திராவிடர் கழகம்.

தென்னார்க்காடு ஜில்லா வளவனூர் திராவிடர் கழகம். தலைவர் தோழர் சுந்தரமூர்த்தி அவர்கள்.

வடார்க்காடு ஜில்லா திருப்பத்தூர் திராவிடர் கழகம். தலைவர் தோழர் சி. செ. செயவேல் அவர்கள்.

திருநெல்வேலி ஜில்லா கருவேலம்பாடு திராவிடர் கழகம். தலைவர் தோழர் கெ. பி. பெரியசாமி அவர்கள்.

தஞ்சை ஜில்லா மாரியம்மன் கோவில் திராவிடர் கழகம். தலைவர் தோழர் எஸ். பி. சாமி அவர்கள். தீர்மானம் படித்தவர் ந. பசுபதி அவர்கள்.

ஷை ஜில்லா கபிஸ்தலம் திராவிடர்கள். தலைவர் தோழர் கே. வி. அகஸ்டின் அவர்கள்.

இராமனாதபுரம் ஜில்லா காரைக்குடி திராவிடர் கழகம். தலைவர் தோழர் ஆர். நாராயணசாமி அவர்கள்.

செங்கற்பட்டு ஜில்லா திருவள்ளூர் திராவிடர் கழகம். தலைவர் தோழர் மு. லட்சுமணன் அவர்கள்.

அரூர் தாலுக்கா மூக்கனூர்ப்பட்டி திராவிடர் கழகம். தலைவர் தோழர் அய்யாறு அவர்கள்.

தஞ்சை ஜில்லா கு. குமரங்குடி திராவிடர் கழகம். தலைவர் தோழர் எம். பச்சமுத்து அவர்கள்.

கொழும்பு, பாப்பாக்குடி பகுத்தறிவுக் கழகம் தலைவர் எஸ். ஜீ. முத்தையா அவர்கள். (5—2—48)

தஞ்சை ஜில்லா ஆடுதுறை திராவிடர் கழகம்.

வடார்க்காடு ஜில்லா மன்சுராபாத் திராவிடர் கழகம். தலைவர் தோழர் இரா. குருசாமியவர்கள்.

ஷை ஜில்லா வேலூர் திராவிடர் கழகம். தலைவர் தோழர் சுப்பிரமணியம்.

கோவை ஜில்லா சூலூர் திராவிடர் கழகம். தலைவர் தோழர் எஸ். கே. கருப்பண்ணன் அவர்கள்.

பெங்களூர் பெரியார் இராமசாமி நகர் திராவிடர் கழகம். தலைவர் தோழர் வி. பாலகிருஷ்ணனவர்கள்.

கோவை ஜில்லா கோட்டமங்கலம் திராவிடர் கழகம். தலைவர் தோழர் ஆர். சுப்பிரமணியம் அவர்கள்.

தஞ்சை ஜில்லா வலங்கைமான் திராவிடர் கழகம். தலைவர் தோழர் டி. பி. அழகப்பா அவர்கள்.

திருச்சி ஜில்லாகீழவாளாடித் திராவிடர் கழகம். தலைவர் தோழர் எ. பிச்சை அவர்கள்.

தஞ்சை ஜில்லா அறந்தாங்கி திராவிடர் கழகம். தலைவர் தோழர் சீனிவாசன் அவர்கள்.

சேலம் ஜில்லா மத்தூர் திராவிடர் கழகம். தலைவர் தோழர் எம். ஆர். கோவிந்தன் அவர்கள்.

தஞ்சை ஜில்லா அறந்தாங்கி பஞ்சாயத்துப் போர்டு 25-2-48ம் நாள் அங்கத்தினர் சாதாரணக் கூட்டம.

கோவை ஜில்லா ஈரோடு திராவிடர் கழகம். தலைவர் தோழர் பி. ஷண்முகவேலாயுதம் அவர்கள்.

சென்னை ஏழுகிணறுத் திராவிடர் கழகம். தலைவர் தோழர் பி. கோபாலன்.

தஞ்சை ஜில்லா ஆலத்தம்பாடி திராவிடர் கழகம்.

திருச்சி ஜில்லா அம்மாபாளையம் திராவிடர் கழகம். தலைவர் தோழர் விசாலாட்சியம்மையார் அவர்கள்.

திருச்சி ஜில்லா துறையூர்த் திராவிடர் கழகம்.

(முதல் பத்தி பார்க்க)

# பெரியாரைப் பிழையேல்!

★

“தமிழரென்போர் பித்தலாட்டக் கருங்காலிகளே” எனவும் “தமிழரசு என்று பேசுவது—ஒன்று அறியாமையாக இருக்கவேண்டும் அல்லது பித்தலாட்டமாக இருக்கவேண்டும்” எனவும் பெரியார் ஈ. வெ. ரா. சமீபத்தில் தமது சொற்பொழிவில் குறிப்பிட்டதாக தமிழ்ப் பத்திரிகையில் கண்டேன். ஒரு தமிழ் வாரப்பத்திரிகை பெரியார் அவர்களின் கருத்துரையைக் கண்டித்து, அவர் அதை வாபஸ்பெறவேண்டுமென்று எழுதுகிறது.

எந்தக் கருத்தில் எந்த நிலையில் எதை உத்தேசித்துப் பெரியார் அதுமாதிரி சொன்னாரோ எனக்குத் தெரியாது. ஒரு விதத்தில் அவர் சொன்னதும் உண்மையே. இன்றையத் தமிழர்கள் உண்மையான தமிழ்ப் பழக்க வழக்கங்களையும் சீலமான உயர்ந்த தமிழ்ப் பண்பாட்டையும் போலிப் பழக்க வழக்கங்களிலிருந்தும், பொய்யான கட்டுக்கதைகளிலிருந்தும் பிரித்து வாழ இயலாதிருக்கின்றனர். வேறு பொருளில் அதை அவர் சொல்லியிருந்தால், அது ஓர் பிசகு என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். விஷயம் எதுவாயிருப்பினும், நாம் அவருடைய பேச்சுக்களைக் கண்டிக்கக் கூடாது. நான் முன்னரோர் முறை கூறியவாறு, 50 அல்லது 60 வயது கடந்துவிட்ட பின்னர், ஒருவர் தம்முடைய பேச்சுக்களிலும் செய்கைகளிலும் முறை தவறி விடுவது சகஜம். நம்முடைய நாட்டிலே சகல தலைவர்களிடத்திலும் இதைக்காணலாம்.

நாம் எங்கு போனாலும், வேண்டியதும் வேண்டாததுமான பலவித சாமான்கள் கூளமாக இருப்பதிலிருந்து நமக்கு வேண்டியனவற்றை நாம் பொறுக்கியெடுத்துக் கொள்ளவேண்டியது முறை. உதாரணமாக நமக்குப் பென்சில் வேண்டியிருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். மை, ரப்பர், காகிதம், எழுதுகோல், கொட்டைகள் மற்றும் இதர சாமான்கள் உள்ள ஒரு கடைக்குப்போனால், அங்கு ஒன்றிரண்டு விஷபதார்த்தங்களையும் காண்கிறோம் என்று வைத்துக்கொள்வோம். விஷபதார்த்தங்களைத்தவிர, மற்று எல்லா சாமான்களுமே பொதுவாக நாம் உபயோகிக்கத் தகுந்தவை. ஆனால் அந்த நேரத்தில் நமக்கு வேண்டிய பொருள் பென்சில் ஆக இருப்பதால், அதை எடுத்துக்கொள்வோம். முழு மூச்சாக விஷ பதார்த்தங்களை ஒதுக்கித் தள்ளி விடுவோம். அதேபோல் அவருடைய அறிவு, சித்தாந்தம், அநுபவம் என்ற களஞ்சியத்திலிருந்து வரும் உபதேசங்கள், கருத்துரைகள், கோட்பாடுகள், புத்திமதிகள் ஆகியவற்றைப் பெரியார் தாராளமாக வெளியிடட்டும். நமக்கு வேண்டியவற்றை அவைகளிலிருந்து பொறுக்கியெடுத்துக்கொள்வோம். அவருடைய ஆயிரக்கணக்கான அநுபவசித்தாந்தங்களைப் பெரியார் வெள்ளம்போல் பிரயோகிக்கும்போது, அவருடைய கருத்துரைகள் ஒன்றிரண்டு நமக்குப் பிடிக்காத காரணத்தால், அவரை நாம் ஏன் கண்டிக்க வேண்டும்? இதே ரீதியில்—அதாவது ஒரு தமிழ் வாரப்பத்திரிகை கண்டிக்கப் புகுந்த முறையில்—பெரியாருடைய ஏதோ ஒரு சில கருத்துரைகளைக் கண்டித்து எழுதுவதும், பேசுவதுமாகக் காலங்கடத்துவீர்களானால், நம்முடைய இளைஞர்கள் தான் நஷ்டமடைந்தவர்களாவார்கள்; பெரியார் அவர்களுடைய அநுபவ சித்தாந்தங்களை அறிவதற்கான வாய்ப்பு அவர்களுக்கு இல்லாமற் போய்விடும்.

15—2—48, சென்னை.

**ஜி. டி. நாயுடு.**

[எல்லாத் தமிழர் மாநாட்டில் தோழர் ஜி. டி. அவர்கள் பேசியதின் ஒரு பகுதி.]

——:●:——

# ஆம்! ஆம்! ஒப்புக்கொள்கிறேன்.

★

பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் தமிழரென்போர் பித்தலாட்டக்காரர்கள், கருங்காலிகள் என்று கூறிவைதற்காக அவர் வருத்தம் தெரிவிக்க வேண்டுமென்று நான் விரும்பினேன். ஆனால் அவர் வருந்தவில்லை. நான் வருந்தினேன். இனி இச்சொற்களோடு தமிழரென்போர் சுயநலக்காரர்கள், மோசக்காரர்கள், உணர்ச்சி, அறிவு அற்றவர்கள், மானம், வெட்கம் அற்றவர்கள் என்பவைகளையும் சேர்த்து வைவதற்குப் பெரியாரைப்போல இன்னும் சிலர் தேவை எனத்தோன்றுகிறது. காரணம் அப்பொழுதாகிலும் தமிழர் என்பவர்களுக்கு உணர்ச்சி தோன்றாதா? என்ற ஆசைதான்.

29—2—48, திருச்சி.

**கி. ஆ. பெ. விஸ்வநாதம்.**

[தமிழர் நாடு 29-2-48ம் நாள் தலையங்கத்தின் ஒருபகுதி.]

[5ம் பக்கத் தொடர்ச்சி]

பரப்புச் சொந்தமாக இருக்கிறது.

3. **பெல்ஜியம்.** இது மேற்கு அய்ரோப்பாவில் மிகச்சிறிய தேசம். நமது மாகாணத்தில் ஒரு ஜில்லா அளவுகூட இருக்காது. இந்தச் சின்ன நாட்டுக்கு மிகப்பெரிய தேசம் ஆப்பிரிக்காவில் சொந்தமாயிருக்கிறது. அதாவது காங்கோ பிரதேசம். பெல்ஜியம் 12 ஆயிரம் சதுர மைல் உள்ள பிரதேசம். இதற்கு ஆப்பிரிக்காக் கண்டத்தில் சொந்தமாயிருக்கும் காங்கோ பிரதேசம் 9லட்சம் சதுரமைல் உள்ளது. அதாவது சுண்டக்காய்க்கும் பனங்காய்க்கும் உள்ள வித்தியாசம்.

4- **போர்ச்சுக்கல் தேசம்.** இதுவும் மேற்கு அய்ரோப்பாவில் சிறு தேசம். இதற்குச் சொந்தமாக ஆப்பிரிக்காவில் பெரும் நிலப் பகுதிகள் உள்ளன. அவை போர்ச்சுகீஸ் மேற்குஆப்பிரிக்கா (அங்கோலா) போர்ச்சுகீஸ் கிழக்கு ஆப்பிரிக்கா (மொஜாக்பிக்) கினியா பிரதேசம் முதலியன. இந்தியாவில் கோவாவும் இதற்குரியது.

5. **ஸ்பெயின் தேசம்.** இதுவும் மேற்கு அய்ரோப்பாவில் உள்ள சிறிய தேசம். இதற்கும் ஆப்பிரிக்காக் கண்டத்தில் பெரும் நிலப்பரப்பு சொந்தமாகவுள்ளது. அதாவது மொராக்கொ பிரதேசம், கினியா பிரதேசம்.

6 **டச்சு தேசம்:** (ஒல்லாந்து தேசம்) இதுவும் மேற்கு அய்ரோப்பாவில் சிறு தேசம். ஆனால் மிகப் பெரிய நிலப் பரப்பைத் தனக்குரியதாகப் பிடித்து வைத்திருக்கிறது. கிழக்கு இந்தியத் தீவுகள் (இந்தோனேஷியா தீவுகள்) இதற்குச் சொந்தமாகவுள்ளன. அவை யாவன; சுமாத்ரா தீவு, ஜாவா தீவு, போர்னியோ தீவு, செலிபிஸ் தீவு, நியூகினி தீவின் மேற்குப் பகுதிகள். சுண்டைக்காய் அளவுள்ள இந்த டச்சு தேசத்துக்குப் பெரிய பனங்காய் அளவுள்ள தீவுகள் சொந்தமாகவுள்ளன.

இவ்வாறு ஆப்பிரிக்கா கண்டம் முழுவதையும் மேற்கு அய்ரோப்பிய நாடுகள் பங்குபோட்டுக் கொண்டதோடு, ஆசியா கண்டத்திலும், கிழக்கு இந்தியத் தீவுகளிலும் மேற்கு இந்தியத் தீவுகளிலும் பெரும் பான்மையான பகுதி இடங்களைக் கைபற்றிக் கொண்டிருக்கின்றன. இதிலிருந்து மேற்கு அய்ரோப்பிய நாடுகள் முதலாளித் தன்மையுள்ள நாடுகள் என்பதும், இவை ஆப்ரிக்கா, ஆசியா கண்டங்களில் உள்ள தேசங்களைச் சுரண்டி வாழ வேண்டிய நாடுகள் என்பதும் வெள்ளிடை மலைபோல் விளங்குகிறதல்லவா? இந்த மேற்கு அய்ரோப்பிய நாடுகளில் சில முடி அரசு நாடுகளாகவும் சில குடி அரசு நாடுகளாகவும் உள்ளன.


வெளிவந்து விட்டது! எரிமலையின் புதியவெளியீடு!

தமிழுக்கும் தமிழ் நாட்டுக்கும் பார்ப்பானால் வந்த வினையைப்பற்றி அழகாகவும், ஆராய்ச்சி பூர்வமாகவும் அறிஞர் சுப. நாராயணன் எழுதியிருக்கும்

**ஆரியப் புல்லுருவி.**

தெளிந்த சிந்தனை, தேர்ந்த கருத்துக்கள்.

விலை ஆறணாதான். வியாபாரிகளுக்கு 25% கழிவு உண்டு.

விவரங்களுக்கு:—

எரிமலைப் பதிப்பகம், துறையூர், திருச்சி ஜில்லா.


என்றாலும், இவை ஏகாதிபத்திய வெறியும் முதலாளித் தன்மையும் உடைய தேசங்கள். ஆகவே இவைகளை ஒன்று சேர்த்து ஒரு யூனியனை ஏற்படுத்த இங்கிலாந்து முயற்சி செய்கிறது. இதற்கு வேறு பெயர் கூற வேண்டுமானால், "அய்ரோப்பிய முதலாளி தேசங்களின் கூட்டுறவு சங்கம் என்று கூறலாம். இந்தச் சங்கத்தின் நோக்கம் முதலில் கூறியது போல, ஆப்பிரிக்கா, ஆசியா நாடுகளின் பொருளாதாரத்தை உறிஞ்சிக் கொழுப்பதும், சமயம் நேரிட்டால் ருஷியாவை ஒன்று சேர்ந்து எதிர்ப்பதும் ஆகும். மேற்கு அய்ரோப்பிய யூனியனின் இரகசியம் இதுதான்.

ருஷியா பத்திரிகையாகிய "ப்ரவ்டா" இதைப் பற்றிக் கூறியதாவது— "ஆசியா ஆப்பிரிக்காவிலுள்ள மக்களைச் சுரண்டு வதற்கு ஆனபாடத்தை மேற்கு அய்ரோப்பிய நாடுகளுக்குச் சொல்லிக் கொடுப்பது தான் தோழர் பெவின் உடைய திட்டம்"

நியூடைம்ஸ் பத்திரிகை எழுதியதாவது:—பிரிட்டிஷ், பிரெஞ்சு, டச்சு, பெல்ஜியம், போர்ச்சுகல் நாடுகள், ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் இவைகளுக்குரிய நாடுகளை எப்படிச் சுரண்டுவது என்னும் வழிகளை யோசிப்பது தான் மேற்கு அய்ரோப்பிய நாடுகளின் யூனியன். அன்றியும் சோவியத் யூனியனுக்கும் இதர ஜனநாயக நாடுகளுக்கும் எதிராக மேற்கு அய்ரோப்பிய நாடுகளைத் தூண்டி விடுவதற்கு ஏற்படுத்துவதுதான் மேற்கு அய்ரோப்பிய அய்க்கிய சங்கம்.

இதுகாறும் எடுத்துக் காட்டியதிலிருந்து நாம் தெரிந்து கொள்ளும் அரசியல் ஜோசியம் என்னவென்றால், இனிவரப் போகிற மூன்றாவது உலக யுத்தத்தில் இரண்டு கொள்கைகளுக்கு யுத்தம் நடக்கப் போகிறது. இரண்டு கொள்கைகளில் ஒன்று ஏகாதிபத்தியத் தன்மையுள்ள முதலாளிநாடுகள். மற்றொன்று பொதுவுடைமைக் கொள்கையுள்ள ஜனநாயக நாடுகள். அதாவது முதலாளி தொழிலாளி போராட்டத்திற்கு விதை விதைக்கப்படுகிறது. என்பதுதான், மேற்கு அய்ரோப்பிய அய்க்கிய சங்கம் என்பதன் கருத்துரையாகும்.

இப்போது மேற்கு அய்ரோப்பிய அய்க்கிய சங்கத்துடன் நார்வே, சுவீடன் முதலிய தேசங்களையும் சேர்த்துக் கொள்ளப் போவதாகத் தெரிகிறது. இந்தத் தேசங்களுக்கு, உலகத்திலே வேறெங்கும் சொந்தமாக ஊர்கள் கிடையா. ஆனால் இந்தத் தேசங்களை இச்சங்கத்துடன் சேர்த்துக் கொண்டு ருஷியாவை எதிர்த்துப் போராடப் பிரிட்டன் யோசிக்கிறது போலும். உலகத்திலே பொதுவுடைமை பரவாதபடி தடுக்க ஏகாதிபத்தியமும் முதலாளித் தன்மையும் உள்ள நாடுகளை எல்லாம் பிரிட்டன் ஒன்று சேர்த்து வருகிறது. இது, அடுத்து வரப்போகிற மூன்றாவது உலகயுத்தத்திற்கு முஸ்தீப்புச் செய்வதாகும்.

[6ம் பக்கத் தொடர்ச்சி]

பரம்பரையான பார்ப்பனர்கள்தான். இதுமட்டுமல்ல. மணிமுடி தரித்த மன்னர்களை ஆண்டவன் பெயரைச் சொல்லி வீழ்த்தியிருக்கிறார்கள். பல பலசாம்ராஜ்ஜியங்களை கவிழ்த்திருக்கிறார்கள். ஏன் அதிகம் கூறுவானேன். இந்த நாட்டை ஆங்கிலேயனுக்குக் காட்டிக் கொடுத்ததே இந்தப் பார்ப்பனர்கள்தான். இவ்வாறெல்லாம் செய்த பார்ப்பனீயம் படுபாவி கோட்சேயை அதுவும் பார்ப்பனக் கோட்சேயை ஏன் கடவுளாக்காது? இதற்குள் இக்காரியத்தில் ஈடுபட்டிருப்பார்கள். ஆனல் பெரியாரின் பெரும் பாணம் பாயுமே! அண்டசராசரங்களை கிளறுமே! என எண்ணி தயக்கத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். பார்ப்பனர்கள் எவ்விதம் பசப்பினாலும் பார்ப்பனீயத்திற்கு சாவுமணி அடிக்கும்நாள் நெருங்கிக் கொண்டேதான் வருகிறது! அடித்தேதீரும்!

# மத வெறியை ஒழிக்கும் செயல் என்ன?

ரோஜா முத்தையா

# மகாத்மா மீது நம்பிக்கையா? கருடாள்வார் மீது காதலா?

★

[3ம் பக்கத் தொடர்ச்சி]

மென்று பலதடவை சொன்னார். மகாத்மா பேரில்நமக்குப்பக்தியோ நம்பிக்கையோயிருக்கிறதா? அவரைப்பெரியவரென்றுநினைக்கிறோமா? அவர் சொன்னது உண்மை என்று படுகிறதா? அப்படியானால் நாம் செய்ய வேண்டுவது என்ன? நாம் முதலில் தீண்டாமையை விட்டுவிட வேண்டும். மற்றவர்களையும் அவ்வழியில் கொண்டுவர வேண்டும். ரயில்வேயிலும், கடைவீதி சந்தைகளிலும், ஸ்பென்சர் ஓட்டலிலும், டின்னர் பார்ட்டியிலும் தீண்டாமையை விடுவது தீண்டாமையை விடுவதாகாது. நமது அடுக்களை வரையிலும் தீண்டாமைபோக வேண்டும். அது கஷ்டமாச்சே! எல்லோரும் ஒத்துக் கொள்ள மாட்டார்களே! எனக்குச் சம்மதம்தான், எல்லாரும் சம்மதிக்க வேண்டுமே! என்னும் வார்த்தைகள் பிரயோஜனமில்லை. மகாத்மா வார்த்தையில் நமக்கு நம்பிக்கைதானே? நம்பிக்கை யிருந்தால் நமது சமயமும் சாதியும் அழிந்துதானே போகவேண்டும். இந்தக் கஷ்டத்தைவிட தீண்டாமையை விட்டுப் பிழைப்பது மேலல்லவா? முப்பது நாற்பதினாயிரம் பெண்களையும் குழந்தைகளையும் மதமாற்றி வைத்துக் கொண்டு, அவர்களை மீட்பது கஷ்டத்திலும் பெரிய கஷ்டமாகவிருக்கிறதே, அதைவிடவா ஒரு அரிஜன் பையனை வீட்டு வெளிவேலைக்கு வைத்துக் கொள்ளுவது கஷ்டம்?

வைதீகனையும், அவன் கடவுளையும், சாஸ்திரங்களையும்இதில் நம்பாதீர்கள். அவர்கள் எந்தக் கூட்டத்திலும் கோவிந்தாபோடுவார்கள். பிராமணர்கள் நினைத்திருந்தால் இதற்குள் தீண்டாமை எவ்வளவோ போயிருக்கும். மனதார நினைக்கமாட்டார்கள். அவர்கள் வைதீக மதமும் ஏற்பாடும் அதற்கு இடம் கொடுக்காது. மற்ற சாதிகளெல்லாம் அழிந்தாலும் அவர்களுக்குக் கவலையில்லை. தங்கள் சாதியும் தங்கள் சமயப் புரட்டும் அழியாது என்பது அவர்கள் நிச்சயம். லெட்சார்ச்சனை லெட்சதீபம், அபிஷேக ஆராதனைகளை விவேகமில்லாத பணக்காரர்கள் நடத்துகிறார்கள். அதில் பிராமணனுக்கு லாபமேயல்லாமல் நஷ்டமில்லை. அதைக்கொண்டே மகாத்மா பக்தர்களாகி விடுவார்கள். பலலெட்சம் மகமதியர்களும் கிருஸ்துவர்களும் நம்மவர்கள் தானே. நமக்குள் தானே சண்டையும் கொள்ளையும் கொலையும்.

---

“10 வயதுள்ள பிராமணனும் 100 வயதுள்ள க்ஷத்திரியனும் பிதா—புத்திரன் என்ற மரியாதையோடு நடக்கவேண்டும். அதாவது பிராமணனைப் பிதாவாகவும் க்ஷத்திரியன் பிராமணனுடைய புத்திரனாகவும் கருத வேண்டும்”

இந்த மனு நீதி சட்டமாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்க அதை நடைமுறையில் நடத்தி வருகிற நமது திராவிட மந்திரிகள், அக்கிரகாரச் சிறுவரான அய்ந்து வயது அனந்தராமனுக்கு எப்படிச் சொந்தம்? என்ன முறை?

---

சண்டை வந்தால் ஓடுவதும் ஒதுங்குவதுமாயிருந்து, சண்டை தீர்ந்து சமாதானம் வந்தால், முன்னால் வந்து ஒழுங்கு பேசுவதில் பழக்கப்பட்டு வழக்கப் பட்டவர்கள் பிராமணர்கள்.

மற்ற தேசங்களில் அடிமைப் பட்டுக் கிடக்கும் நாடு, அடிமையிலிருந்து நீங்கினால் அதோடு அதன் வேலையும் முடிந்தது. அப்படியல்ல நம் நாடு. சமுதாய விஷயங்களில் பலதைச் செப்பனிட வேண்டும். இல்லையேல் நாட்டுக் கலகத்தோடு பழைய அடிமைத்தனத்திற்கே வந்துவிடும். இதை மகாத்மா உணர்ந்து தான் தீண்டாமையும், சாதி வித்தியாசமும், சமய வித்தியாசமும் போகவேண்டுமென்று வற்புறுத்திச்சொன்னார். இல்லையேல் அழிந்து போவீர்களென்று தீர்க்கமாகச்சொன்னார். தீண்டாமையை விடுவதும், நாமம், விபூதி, பொட்டு முதலியவைகளால் சமயத்தை வித்தியாசப் படுத்திக் காட்டிக் கொண்டிருப்பதிலும், தன்னைப் பெரிதாக நினைக்கிறோமே ஒழிய, நாமும் நம் சமயமும் அழிந்து போய்க் கொண்டிருப்பதையும் போவதையும் நினைப்பதில்லை. படித்தவன் என்று சொல்லிக் கொள்ளுகிறவன் கூட அப்படியேயிருக்கிறான்.

பிராமணர்கள் சமயம் கிடைக்கையிலெல்லாம் தாங்கள் ஏமாற்றிப்பிழைத்த பொய்க் கதைகளைப் பாமரர்களையும், படித்தும் அறிவற்றிருப்போர்களையும்,பணக்கார ஆலோசனை இல்லாதவர்களையும் பழைய பள்ளத்திலேயே நிறுத்தி வைக்கப் பழைய பொய்க் கதைகளில் கடவுளிருப்பதாகக் காட்டிக் கொண்டிப்பார்கள். கல்கி பெரிய பத்திராதிபர், எழுத்தாளி, எல்லா விவகாரமும் தெரிந்தவர், மந்திரி சபையில் காங்கரசில் மதிப்புடையவர், இராஜகோபாலாச்சாரிக்கு முக்கிய சிநேகிதர். இவ்வளவு இருந்தும் காஷ்மீர் பஞ்சாயத்து அனுமார் வால்வளர்ந்தது போல வளர்ந்து போகிற தென்று எழுதுகிறார். ஏன்? நான் சொல்லும் காரணம் தவிர வேறு என்ன? காஷ்மீர் பஞ்சாயத்திற்கும் அனுமான் வாலுக்கும் சம்மந்தமென்ன? எந்த உவமானத்திலும் பழைய கதை விளங்கவேண்டும். அனுமானைப்பற்றி அவர் தெரிந்திருக்க வேண்டும். தெரிந்திருந்தாலும்சொல்லமாட்டார்கள். அது சனாதன தருமத்திற்கு விரோதம். நான் அனுமானைப்பற்றி எத்தனையோதரம் எழுதியிருக்கிறேன், இதிலுமெழுதுகிறேன்.

கேசரி என்று ஒரு இராட்சதனிருந்தான். இவனுக்கு அஞ்சனை என்று ஒரு மகள். இவளைக் கேசரி என்கிற வானரத்திற்குக் கலியாணம் செய்து கொடுத்தான். இவர்கள் வாழ்ந்தார்கள். அநேக காலம் குழந்தை இல்லாததால் அஞ்சனை தவசுக்குப் போய் விட்டாள். அவளிடம் வாயுபகவான் போய் அவளுக்குப் பணி விடை செய்து வந்தார். சிவனும் பார்

---

**மதவெறி ஒழிப்போர் மதத்தைக்கைவிடல்.**

ரோஜா முத்தையா

வதியும் பூலோகம் சுற்றி வந்தார்கள். திருவேங்கடம் மலைக்கு வருகையில் ஆண் பெண் குரங்குகள் கூடிக் களிப்பதைக் கண்டார்கள். இவர்களுக்கும் அவ்விதமிருக்க ஆசையுண்டாகி ஆண் பெண் குரங்காக மாறினார்கள். அநேக காலம் போகித்தார்கள். அதிலுண்டான தேசசை ஆலிலையில் பிடித்து வைத்தார்கள். அதை வாயு பகவான் அஞ்சனைக்குக் கொண்டுபோய் கொடுத்தார்; சாப்பிட்டாள்; அதிலிருந்து அனுமார் பிறந்தார். ஒரு இராட்சதன், அவன் பெண், அவள் புருஷன், ஒரு குரங்கு. தெய்வலோகத்திலிருக்கும் வாயு பகவான். கைலாசத்திலிருக்கும் சிவபெருமான், அவர் தேசஸ் வெளிப்படக்காரணமாயிருந்த பார்வதி இவர்கள் இரண்டு பேரும் குரங்கு ரூபம். அநேக காலம் போகம். ஒரு ஆல இலை. இத்தனையும் சேர்ந்து பிறந்தவர் அனுமான். இத்தனையையும் சேர்த்துக் கூட்டிக் கழித்துப் பார்த்தாலும், அனுமார் உற்பவம் புத்திக்கும், நியாயத்திற்கும் ஒத்ததாகவிருக்கிறதா? இதைக்கூடத் தெரிந்து கொள்ளாதநாம், பலவற்றிலும் முன்னேறி நிற்கும் ஆசியாக் கண்டத்தார்களின் மத்தியில் அனுமான் வாலை நினைத்துக் கொண்டிருந்தால், பார்ப்பான் வயிறு நிறையலாம். சுயராஜ்ஜியம் நிலைத்துவிடுமா? அனுமான் சிரஞ்சீவி. உலகமுள்ளளவு மிருக்கும்படியான வரம். வாலோ எவ்வளவு தூரமானாலும் நீண்டது. பராக்கிரமமோ அளவிற்கு அடங்காதது. சீதை என்கிற ஒரு பெண்ணிற்காக நீட்டின வாலை, ஆயிரக்கணக்காகப் பெண்கள் அன்னியரிடம் அவதிப்படுகிறார்களே, வாலை விட்டு அவர்களை அவரவர்களுடையவீட்டில் சேர்த்தால் சக்தியுடையவானுதான். மலை, காடு பிரதேசத்தில் அனுமாருக்குப் பழக்கம் அதிகம். புளிச்சோறு தயிர்ச்சோறு விரும்பாத காஷ்மீர் மலைப் பிரதேசத்தில் அனுமார் வாலை நீட்டினால் எவ்வளவோ உபகாரமாகவிருக்கும். ஒரு பெண்ணுக்காக நீட்டின வாலை எத்தனையோ ஆயிரம் பெண்களுக்கு நீட்டக் கூடாதா? இலட்சுமி அவதாரமும் மகா விஷ்ணுவின் பெண்சாதியுமான பெண்ணுக்குத்தான் வால் நீளுமோ? மனிதப் பெண்களுக்கு நீளாதோ? மனிதருக்கு நீளாதவால் மனிதருக்கு ஏன்? என்ன பிரயோஜனம்?

அனுமார் உற்பவத்தைப் பற்றி நான் தெரிந்தது இவ்வளவுதான். இப்படியல்ல வென்றால் இராமாயண ஆராய்ச்சிப் பண்டிதர்களும், கம்பராமாயண கவி காட்சியளிக்கும் பண்டிதர்களும் சொல்லட்டும்.

திருக்கோவிலூர்ப் பெண்ணை ஆற்றில் மாலை 5-மணிக்கு மகாத்மா அஸ்தியைக் கரைக்கும் இடத்திற்கு, நேர்மேலே கருட ஆள்வார் 15 நிமிஷம் அசையாமல் நின்று கொண்டிருந்தது. மறுபடியும் கரைத்த இடத்தையே மூன்று சுற்றுச் சுற்றிவிட்டு கரைத்த உடனே போய்விட்டது. அவ்விடம் வந்திருந்த இருபதினாயிரம் பேரும் கருட ஆள்வாரையும் காந்தி அஸ்தியையும் தரி

“பிராமணன் எல்லா ஜாதியிலும் உயர்ந்தவனாகையினாலும், பிர்மாவின் முகத்தில் பிறந்ததினாலும், இவ்வுலகத்திலுள்ள எல்லா ஜாதிக்காரர்களின் சொத்துக்களையும் கொள்ளையடிப்பதற்கு உரிமையுடையவனாகின்றான்”

திருட்டுப் பயல்களே! என்னுடைய பொருளைக் கொள்ளையடித்தால் உதை தின்று சாக வேண்டுமென்பதா வகுப்புத்துவேஷம்?

சித்தார்கள் என்று தேசியப் பத்திரிகை எழுதுகிறது. கருடாள்வார் கதை எழுதுவதும், பழைய சமய நினைவு மாறாமலிருக்கவே. ஆறு குளம் குட்டையில் மீன் பிடிக்கையில் கருடன் வரும். கீழும் மேலும் பறக்கும், வட்டமிடும். ஆற்றில் கூட்டம் கண்டவுடன் மீன் பிடிப்பதாக நினைத்திருக்கலாம். சாயந்திர நேரத்தில் ஆற்றருகில் இரைக்கு வந்துமிருக்கலாம். உலகமெல்லாம் மகாத்மாவிற்குப் பக்தி செலுத்தியிருக்கையில் கருடனும் பக்தி செலுத்தியிருக்கட்டும். கருடன் பக்தி செலுத்திற்று என்று சொல்லவில்லை. பார்த்துப் போனதாகவே பார்ப்பனர்கள் எழுதுகிறார்கள். அதிலும் விட்டுக் கொடுக்க மாட்டார்கள். கருட ஆள்வாரோ பெரிய ஜந்து. வைகுண்டத்தில் ஆயிரம் முடிகளை உடைய விஷ்ணுவையும், அவர் படுக்கையான ஆயிரம் முடியுடைய ஆதிசேஷனையும் தூக்கி வைகுண்டத்திற்கும் பூலோகத்திற்குமாக சஞ்சரிக்கும். அத்தனை பெரிய ஜந்து. அந்தப் பெரிய ஜந்து ஒரு சிறிய கருடனுள் புகுந்து, இருபதினாயிரம் பேர்களுக்குத் தரிசனம் கொடுப்பதென்றால் விசேடம்தான். அனுமானைவிட கருட ஆள்வாரின் உற்பவம் விசித்திரமாகவிருக்கும். இரண்டு முட்டை போட்டார்கள். அடைகிடந்தார்கள். பலநாள் குஞ்சுபொறிக்கவில்லை. முட்டையை உடைத்துப் பார்த்தார்கள். சரியாகக் கருவாகாமல் அரை உடம்போடு அருணன் உண்டானான். அவன் சூரியனுக்குச்சாரதியானான். இரண்டாவது முட்டையில் கெருடன் உண்டானான். விஷ்ணுவிற்கு வாகனமானான். கெருடன் லீலைகளோ அனந்தம். நானும் எழுதி எழுதிச் சலித்தேன். கருட புராணத்தைப் 'பார்த்துக் கொள்ளுங்கள். மகாத்மா காந்தி அவர்கள் பாரதம் பழி தீர்க்க எழுதின புஸ்தகம், அதுதான் அதிலிருக்கிறது; அந்தப் புராணத்தை நான் ஒத்துக் கொள்ளமாட்டேன் என்றார். மகாபாரதத்திற்குக் கல்கியில் இராஜகோபாலாச்சாரியார் உரை எழுதிக்கொண்டிருந்தார். 'தினமணி'யும் வில்லிப்புத்தூரார் பாரதத்திற்கு உரை எழுதிக்கொண்டிருந்தது. இதைச்சொன்னால் வகுப்புத்துவேஷி என்கிறார்கள். பொய்யும் புளுகுமெழுதி சனங்களை ஏமாற்றுகிறவர்கள் என்ன துவேஷிகளோ? வகுப்புத் துவேஷத்திற்கு மூலகாரணத்தைக் கவர்ன்மெண்டு கண்டு பிடிக்கட்டும்.

## வரப்பெற்றோம்.

### திராவிட முரசு

மாத வெளியீடு.

ஆசிரியர் ஜீ. ஆர். மணி. தனி இதழ் 0—8—0 ஆண்டுக்கு 5—8—0

20. பப்லோ ரோட், சிங்கப்பூர்.

### பிலிம் சமாசார்.

மாத வெளியீடு.

ஆசிரியர் எஸ். ஜி. அய்யர். தனி இதழ் 0—8—0 ஆண்டுக்கு 6—0—0.

15. கோவிந்துஸ்டிரீட், சென்னை 17.

## ஜாதியை ஒழிக்க, சாஸ்திரத்தில் தீ வை!

ரோஜா முத்தையா

# ஆரியன் தமிழ்ப் புலமை.

## அல்லது

# பாரதியும் வள்ளுவரும்.

[சு. கு. அருணாசலனார்]

★

(சென்ற வாரத் தொடர்ச்சி)

இவற்றை விடுத்து ''இரும்பைக் காய்ச்சி உருக்கியவர்யார்? கடலில் மூழ்கி நன்முத்து எடுத்தவர்யார்? உழுது நன்செய் பயிரிட்டவர்யார்? இழையை நூற்று நல்லாடை நெய்தவர்யார்? அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல் ஆயிரம் தொழில் செய்தவர்யார்?'' என்று பாடச் செய்துவிட்டால் போதுமா? மயிலை இறகு போடு என்று விண்ணப்பிப்பது போலல்லவா இது? இஃதா தொழிலாளர் இயக்கத்தின் குறிக்கோளும் இலக்கணமும்? இவற்றையெல்லாம் நினைக்கும் போதுதான் எமக்கு உள்ளபடியே பொதுவுடைமையாளர் பேரிலும் தொழிலாளர் பேரிலும் இரக்கம் உண்டாகின்றது. விவிலியநூலிலுள்ள (Bible) ஒருமொழி என் நினைவிற்கு வருகின்றது அது 'தேவனே! அவர்கள் தாங்கள் செய்வது இன்னதென்று தெரியாமல் நடந்து கொள்கின்றார்கள். அவர்கள் பிழையைப் பொருத்தருள்க' என்று எசு சொல்வதே.

நம்நாட்டுத் தொழிலாளிகள் தாங்கள் செய்வதின் பயனையும் நிலைமையையும்உணராமல் வஞ்சகர்கள் கையில்பட்டுத் தலையெடுக்க முடியாமல் தாழ்ந்து கிடக்கின்றார்கள். தொழிலாளர் இந்நிலை அடைந்ததற்குத் தங்களது ஏமாந்த நிலைமை காரணமே யொழிய கடவுளோ, மதமோ, முன் பிறவியோ, விதியோ அல்ல. புரட்டான இவற்றைத் தகர்த்தெறிவது முதல் வேலை. ''உடைமைமக்களுக்குப் பொது'' என்று பொதுவுடைமையாளர் தொழிலாளிகளுக்கு உணர்த்த வேண்டும். இவற்றைச் செய்ய பொதுவுடைமைக்காரன் முற்பட வேண்டும். அப்போதுதான் முதலாளியை ஒழிக்க முடியும்.

இந்தப்பாட்டுப் பொதுவுடைமையாளரை ஆக்க வேலை செய்யத் தூண்டுவதற்கு மாறாகப் பயனில்லாமல் அழிவு வேலை செய்யவே தூண்டுகிறது; அவர்களுக்கு வழிகாட்டியாகவுமில்லை. 'உழைப்பாலும் உணர்வாலும் உலகை உண்டாக்'குவோரை (இசையமுது) உலகத்தையழிக்கச் சொல்லுகிறது. அழித்தால் நாமும் தானே அழியவேண்டும். இது முடிக்கும் செயலாகுமா என்ற மலைப்பு அவனுக்கு ஏற்படுவதல்லது ஊக்குமாறில்லையே! ஒருவனது உணவின்மைக்காக ஏனையோர் தம்மைத்தாமே அழித்துக் கொள்வார்களா? இது கிடக்க, உலகையழிக்க நீர் நிலைகளை நிலத்தின்மீது வெட்டிவிடப் போகிறார்களா? கொளுத்திவிடப்போகிறார்களா? ஒருவனது உணவின்மைக்கும் ஆட்சிக்கும் தொடர்பேயல்லாது உலகத்து வாழ்வனவற்றிற்கும் நுகர் பொருளுக்குமல்லவே. எனவே அவனது உணவின்மைக்குக் காரணம் ஆட்சியாளரேயல்லாது உலகமன்று. ஆனால் தொழிலாளர்கள் நலன்கள் அடைவதிலுள்ள தடைக்குக் காரணம் தனி உடைமையைக் காப்பதற்காக அமைக்கப்பட்ட சட்டங்களே, அல்லது அரசு எனினுமமையும். உலகத்தைஅழிப்பது எதற்காக? அழித்தால் வருவது என்ன? என்று பார்த்தால் இப்பாட்டுப் பொருளற்ற—அறிவுக்குப் பொருந்தாத படிற்றுரை என்றே கொள்ள வேண்டும். ஒருவனுக்கு மட்டும் உணவில்லையானால் ஏனோர்க்கு அவன் பசி களைவிப்பதில்தான் இயல்பாக எண்ணம் செல்லுமேயல்லாது தங்களையே அழித்துக்கொள்ளும் எண்ணம் தோன்றாது. உண்மைப் பொதுவுடைமையாளன் மக்கட்குப் பயன்படாத அரசை மாற்றிப் பொதுவுடைமை அரசு—புது அரசு—காண்பானல்லது உலகையழிக்கமாட்டான் தானும்உடன் அழிதலால்.

இதுபற்றிய திருவள்ளுவர் கருத்தைப் பார்ப்போம்.

''இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டிற்
பரந்து கெடுகவுலகு இயற்றியான்''

என்பது அது. உலகில் வாழ்வோர்க்கு முயன்று வாழ்தலையன்றி, இரந்தும் (பிறரது அருளினாலும், தாங்கலினாலும்) உயிர் வாழ்தல் வேண்டி விதித்தானாயின், உலகை உண்டாக்கிய—(கடவுள்) உலகிற்கான அரசியலை வகுத்த—(அரசன்) அக்கொடியார் தாமும் அவனைப் போன்றே கெடுக என்றே உரைத்தார். ஒருவன் இரந்து வாழ்தலும் அவனுக்கு உணவின்மையும் கடவுள் செயலால் அல்ல, உலகை அழிக்காதே, அரசியலை வகுத்தவனை அழி என்பதைக் குறிப்பதே இப்பாட்டு. (குறிப்புரை:— உலகு இயற்றியவன்— உலகைப் படைத்தவன். அஃதாவது கடவுள் (1) உலகத்திற்குரிய அரசை அல்லது அரசியலை அமைத்தவன் அல்லது வகுத்தவன். (2) முற்கால வழக்கையொட்டி அரசனைக் குறிப்பதாயிற்று. இது முடியாட்சிக் காலத்தைக் குறிக்கும். இக்காலை பொது மக்களே அரசியலை வகுக்கின்றனர். அரசனுக்குப் பதிலாகத் தலைவனோ ஆணையாளரோ இருப்பர். இன்று நம் நாட்டில் பொது மக்களே அரசியல் வகுக்கின்றனர். உரோமர் ஆட்சி ஈராயிரம் ஆண்டிற்குமுன்னிருந்தே குடி யாட்சியாய் விளங்கினமை குறிப்பிடத்தக்கது.

இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டுமானால் 'செல்வம் கடவுள் கொடுத்தார்; தொழிலாளர்களையும் படைத்தார்; கடவுள் செயலால் இவ்விரண்டும் படைக்கப்பட்டுக் காப்பாற்றப்பட்டு வருகிறது. இரந்து வாழ்தல் அவனவன் தலைவிதி' என்று நினைக்குமாறு அது (குறள்) கூறவில்லை. பாரதிதாசன் 'இங்கொருவனுக்குக் கூழில்லையெனில்,

கோலினை உடைத்திடுவோம்'

என்று கூறுவதனோடு இதை ஒப்பு நோக்குக. ஒருவன் கொடுத்து ஒருவன் உண்ண வேண்டியிருந்தால்-ஒருவன் உழைத்துப் பாடுபட்டும் அவனுக்குப் போதிய உணவு கிடைக்கவில்லையானால்-அக்கொடுமைக்குக் காரணவான் கடவுளோ, அக்கடவுளின் நிழலில் வாழும் பிறவி முதலாளியாம் உடலுழைப்பில்லாத செல்வரோ, அக்கடவுள் பேரால் ஆட்சி செய்யும் அரசரோ, கடவுளிடமிருந்து நேராக அதிகாரம் பெற்றோம் என்று கூறிக் கொள்ளும் மன்னர்களின் தெய்வீக உரிமைக் கொள்கை அரசரோ, அன்றி வேறு எவ்வகைப்பட்ட அரசோ அவர்களனைவரும் ஒழிக்கப்பட வேண்டும் என்பதுதான் குறளாசிரியர் கருத்தாகும். அஃதாவது ஒருவனுக்கு உண்ண உணவிருந்தால் மட்டும் போதாது. அஃது அவனுடைய முயற்சியால்-பாட்டினால்- (உழைப்பு) வந்ததாக இருக்க வேண்டும். எனவே இன்றைய சமூகம் (இன இயல் அல்லது மன்பதை) பொருளியல், அரசியல் அமைப்பை மாற்றியமைக்க வேண்டும். ''எல்லார்க்கும் தேசம் எல்லார்க்கும் உடைமைஎலாம் எல்லார்க்கும் எல்லா உரிமைகளும் ஆகுகவே! (பா. தா. கவிதை) என்பதே முழக்கமாக இருக்க வேண்டும்.

இனிப் பாரதியாருக்கும் வள்ளுவர்க்கும் உள்ள உடன்பாடுகள்—ஒற்றுமையைப் பார்ப்போம். ''முனை முகத்து நில்லேல்'' என்பது அவ்வை மொழி. ஆனால் வள்ளுவர் படைமாட்சி, படைச் செருக்கு என்ற அதிகாரங்களில் அஞ்சாமையை வலியுறுத்திக் ''கூற்றுடன்று மேல்வரினும் கூடி யெதிர்நிற்கும் ஆற்றல், தொலைவிடத்து 'உலைவிடத்து ஊறஞ்சாவன்கண்' உறின் உயிர்

அஞ்சாமை', 'இறைசெறினும் சீர் குன்றாமை' 'விழித்த கண் வேல் கொண்டெறிய வழித்திமையாமை' முதலியவற்றைக் குறிப்பிடுகின்றார். இக்கருத்தெல்லாம் தொகுத்து- அடக்கி மிக மிகச் சிறுவரியிலே பாரதியார் 'முனையிலே முகத்து நில்' 'குன்றென நிமிர்ந்து நில்' என்று அருளுகின்றார்.

'ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டு ஒன்றாகும்
அன்றி அதுவரினும் வந்தெய்தும்-ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளும் ஈசன் செயல்' என்ற அவ்வை மொழியை மறுப்பார் போன்று பாரதியார் 'நினைப்பது முடியும்' என்று சுருக்கி உரைக்கின்றார். வள்ளுவர் இதையே,

'எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணியராகப் பெறின், என்று விளங்க உரைக்கின்றார். 'எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும்............ "எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு' என்பதையே சிந்திப்பு நல்லது என்ற கருத்திலே 'நன்று கருது' எனப் பாரதியார் மொழிகின்றார். அறிவுக்கு மதிப்புக்கொடு என்பதே இருவர் கருத்தாதலும் காண்க.

"மாடனைக் காடனை வேடனைப் போற்றி
மயங்கும் மதியிலிகாள் எதன்
ஊடும் நின்றோங்கும் அறிவொன்றே தெய்வமென்று ஓதியறியீரோ? என்று வினாவும் முறையில் பாரதி அறிவே தெய்வமென்கிறார். வள்ளுவர் கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை என்று நான்கு அதிகாரம் கல்விக்கு ஒதுக்குதலையும் ஓர்க. "மானமற்று விலங்குகளொப்ப மண்ணில் வாழ்வதை வாழ்வெனலாமா?"

இதையேவள்ளுவர் 'விலங்கொடு மக்கள் அனையர் இலங்கு நூல்,
கற்றாரோடு ஏனையவர். "கண்ணுடையர் என்பவர் கற்றோர்" என்று குறிப்பிடுகின்றார்.

"தேடு கல்வியி லாததோ ரூரைத் தீயினுக்கு இரையாக மடுத்தல்" என்ற பாரதி புரட்சி மொழிக்கு வள்ளுவர் உள்ளம் திறக்கப்படவில்லை. இஃதல்ல கலை மகள் வழிபாடு என்கிறார் பாரதியார்.

"மந்திரத்தை முணு முணுத்து ஏட்டை
வரிசையாகஅடுக்கி அதன்மேல்
சந்தனத்தை மலரை யிடுவோர்
சாத்திரம் இவள் பூசனையன்றாம்"
என்பது அது. "சிலர் பயிரிடுதலை நல்ல தொழில் என்று நினைக்கின்றனர். அந்தப் பிழைப்புப் பெரியோர்களால் பழிக்கப்பட்டது. ஏனெனில் இரும்பை முகத்தில் கொண்ட கலப்பையும் மண்வெட்டியும் நிலத்தையும் நிலத்திலுள்ள பல உயிர்ப்பொருள்களையும் வெட்டுகின்றன அல்லவா? (மனு 10:84) என மனு முதலியோர் இழித்துக்கூறிய உழவை மறுத்து 'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்,
உழந்தும் உழவேதலை' என்ற வள்ளுவர் அடியை ஒட்டி, பாரதியார் 'உழவுக்கும் தொழிலுக்கும்
வந்தனை செய்வோம்—வீணில்
உண்டு களித்திருப்போரை
நிந்தனை செய்வோம்'

'உழுபடை செய்வோம்', 'நல்லகாடு வளர்ப்போம்' என்று குறிப்பிடுகின்றார். 'சாதியிரண்டொழியவேறில்லை'என்ற முதியவள் மொழியை அப்படியே கையாளுகின்றார் பாரதியார். இதைப் பற்றி முன்னுரையிலேயே சுட்டப்பட்டது. 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்; என்பது குறள். தன்னலம் பேணியிழிதொழில் புரியோம்" என்கிறார் பாரதியார். இதில் பிறர் நலம் பேண இழி தொழில் புரியலாம் என்ற குறிப்பு ஒலிக்கின்றது. ஆனால் வள்ளுவர் இதை மறுக்கின்றார்.

"ஈன்றாள் பசி காண்பான் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை"
என்பது அது.

"மாட்டையடித்து வசக்கித் தொழுவினில் மாட்டும் வழக்கத்தைக் கொண்டுவந்தே, வீட்டினில் எம்மிடம் காட்ட வந்தாரதை வெட்டி விட்டோமென்று கும்மியடி" என்ற பாரதி மொழியை வினாவாகச் "சிறை காக்கும் காப்பு எவன் செய்யும் மகளிர்" என்று வள்ளுவர் அருளுகின்றார்.

ஆரிய நச்சரவம் தமிழ் நாட்டைத் தீண்டியபோது வள்ளுவர் தோன்றினார். இது வள்ளுவர் 'நல்லாறெனினும் கொளல் தீது மேலுலகம், இல்லெனினும் ஈதலே நன்று' என்று கூறுவதும் சில ஆரிய வழக்காறுகளை மறுப்பதிலிருந்தும் தெரியலாகும்.

'தமிழரின் உயிர்நிகர் தமிழ்நிலை தாழ்ந்ததால்
இமை திறவாமல் இருந்தநிலையில்
தமிழகம் தமிழுக்குத் தகும் உயர்வளிக்கும்
தலைவனை எண்ணித் தவங் கிடக்கையில்
இலகு பாரதிப்புலவன் தோன்றினான்'
இது பாரதி பிறக்குமுன்பிருந்த நிலை.

............"புதிய
அறம்பாடவந்த அறிஞன் நாட்டில்
படரும் சாதிப்படை மருந்து
மண்டும் மதங்கள் அண்டாநெருப்பவன்
அயலார் எதிர்ப்புக்கு அணையா விளக்கவன்
என்னென்று சொல்வேன்
என்னென்று சொல்வேன்"
இது இருவருக்கும் ஒக்கும்.

பாரதியார் மறைமுகமாக ஓரிரு இடங்களில் ஆரியத்தைத் தழுவியே வந்திருக்கிறார். பாரதியார் கடவுளைக் குறிப்பிதே கவிதை! பிறபொருள் குறித்துப் பேசேல்! கடவுளைக் குறிக்கும் அக்கவிதையும் பொருள் விளங்கிட எழுதுவதும் ஏற்காது! பிறர் மதம் பொய்யெனப் புளுகு! பழமை அனைத்தையும் பற்றுக! புதுமையனைத்தும் புதைப்பீர்! உலகம் கூத்தாடி மீசை போல் எள்ளத்தனை நிலை இல்லாதது! பெண்ணால் அழிவு! இன்றைய தேவையை எழுதேல்! முன்னால் நிலையிலே முட்டுக! புதுச்சொல், புதுநடை போற்றேல்! என்ற இதுபோன்ற நிலையை மாற்றி அந்தாதி, கலம்பகம், மாலை, சித்திரம், வித்தாரம் முதலியன இயற்றாது (பழமையை முறியடித்து) புதிய முறையில் யாவர்க்கும் விளங்கும்படி செய்யுள் இயற்றினார். குறளும் யாவர்க்கும் எளிதில் விளங்கும் தன்மையது.

பண்டைத் தமிழ்மறைகள் மறைந்த பின் அவை கூறிய அறம் பொருள் இன்பம் வீடென்னும் நான்கினையும் தெளிவாக விளக்கும் பொது மறை திருக்குறளே. இந்நூலுள் கடவுள் கொள்கைபற்றிய சொற்கள் யாவும் செந்தமிழிலே யமைந்து நூலின் பொதுத்தன்மையை விளக்குவனவாயிருக்கின்றன. பிரமம், தத்துவம், வருணம், மந்திரம், தந்திரம், ஆன்மா, ஆசிரமம், வேதம், சாத்திரம், யாகம், விட்டுணு, புராணம் முதலிய சொற்கள் இதன்கண் காணப்படவில்லை. இல்லறம் துறவறமென்று மக்கள் வாழ்வு பிரிக்கப்பட்டதேயொழிய வடநூலார் கூறும் நால்வகை நிலைபற்றி (வருணாசிரமம்) அப்பகுப்புஅமையவில்லை. கோத்திரமும், சாதியும் இந்நூலுள் விதந்தோதப்படவில்லை. பத்தாயிரத்திற்கு மேற்பட்ட சொற்களுள்ள இந்நூலில் அம்பது வடசொற்கள் கூடத் தேறவில்லை. நூற்றுக்கு அரை சொற்கள் விழுக்காடு ஆகின்றது. ஆனால் பாரதி நூலுள் நூற்றுக்கு பத்துக்குமேல் விழுக்காடு வட சொற்களும் பிறசொற்களும் பல்கியுள்ளன. பாரதியார் வருணாசிரம முறையைக் கடிந்தாராயினும் அவற்றைப் பாராட்டுவோரையும், பாடியோரையும் (கண்ணன் முதலியோர்) புகழ்ந்தும், சிறப்பித்தும் பாடியது ஏனோ விளங்கவில்லை? இது மறைமுகமாக ஆரியத்திற்கு வாழ்வளிப்பதல்லவா?

Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press 42, Cutchery street, ERODE